**துவக்கம்: 1965**

# உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி

**(தன்னாட்சி)**

**பொன்னேரி – 601 204, திருவள்ளூர் மாவட்டம்.**

தொலைபேசி & தொலை நகலி: **044 - 2797 2266**

தன்னாட்சி அலுவலகம்: **044 - 2797 2400**

| | | |
|---|---|---|
| அலுவலகம் | : | **044 - 2797 1830** |
| மின்னஞ்சல் | : | **principal@lngovernmentcollege.com** |
| இணையதளம் | : | **www.lngovernmentcollege.com** |

# 2018 – 2019 நாட்காட்டி

## சொந்த விவரங்கள்

பெயர் ____________________________________________

முகவரி ____________________________________________

____________________________________________

____________________________________________

# தமிழ்த்தாய் வாழ்த்து

நீராருங் கடலுடுத்த நிலமடந்தைக் கெழிலொழுகும்
சீராரும் வதனமெனத் திகழ்பரத கண்டமிதில்
தெக்கணமும் அதிற்சிறந்த திராவிடநல் திருநாடும்;
தக்கசிறு பிறைநுதலும் தரித்தநறுந் திலகமுமே
அத்திலக வாசனைபோல் அனைத்துலகும் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்
தமிழணங்கே! தமிழணங்கே!
உன்சீரிளமைத் திறம்வியந்து செயல் மறந்து
வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே! வாழ்த்துதுமே!

-‘மனோன்மணியம்’ பெ. சுந்தரம்பிள்ளை

# கொடி வணக்கம்

தாயின் மணிக்கொடி பாரீர் - அதைத்
தாழ்ந்து பணிந்து புகழ்ந்திட வாரீர் (தாயின்)

ஓங்கி வளர்ந்ததோர் கம்பம் - அதன்
உச்சியின்மேல் வந்தே மாதரம் என்று
பாங்கின் எழுதி திகழும் - செய்ய
பட்டொளி வீசி பறந்தது பாரீர் (தாயின்)

கம்பத்தின் கீழ்நிற்றல் காணீர் - எங்கும்
காணரும் வீரர் பெருந்திருக்கூட்டம்
நம்பர்க்குரியர் அவ்வீரர் - தங்கள்
நல்லுயிர் ஈந்தும் கொடியினைக் காப்பர் (தாயின்)

-மகாகவி பாரதியார்

# தேசிய ஒருமைப்பாட்டு உறுதிமொழி

‘நாட்டின் உரிமை வாழ்வையும் ஒருமைப்பாட்டையும் பேணிக்காத்து வலுப்படுத்தச் செயல்படுவேன்’ என்று உளமாற நான் உறுதி கூறுகிறேன்.

‘ஒருபோதும் வன்முறையை நாடேன் என்றும், சமயம், மொழி, வட்டாரம் முதலியவை காரணமாக எழும் வேறுபாடுகளுக்கும், பூசல்களுக்கும் ஏனைய அரசியல் - பொருளாதாரக் குறைபாடுகளுக்கும் அமைதி நெறியிலும் அரசியல் அமைப்பின் வழியிலும் நின்று தீர்வு காண்பேண்’ என்றும் நான் மேலும் உறுதியளிக்கிறேன்.

## நாட்டுப்பண்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
திராவிட உத்கல வங்கா

விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதிக ரங்கா
தவ சுப நாமே ஜாகே
தவ சுப ஆசிஷ மாகே
காஹே தவ ஜய காதா

ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா

ஜயஹே ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே

-மகாகவி இரவீந்திரநாத் தாகூர்

## நாட்டுப்பண் விளக்கம்

இந்தியத் தாயே! மக்களின் இன்பதுன்பங்களைக் கணிக்கின்ற நீ தான், மக்கள் எல்லோருடைய மனதிலும் ஆட்சி செலுத்துகிறாய். நின் திருப்பெயர், பஞ்சாபையும், சிந்துவையும், குசராத்தையும், மராட்டியத்தையும், திராவிடத்தையும், ஒரிசாவையும், வங்காளத்தையும் உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.

அது விந்திய, இமயமலைத் தொடர்களில் எதிரொலிக்கிறது. யமுனை கங்கை நதிகளின் இன்னொலியில் கலக்கிறது; இந்தியக் கடல் அலைகளால் வணங்கப்படுகிறது.

அவை நின்னருளை வேண்டுகின்றன. நின் புகழைப் பாடுகின்றன. இந்தியாவின் இன்பதுன்பங்களைக் கணிக்கின்ற தாயே! உனக்கு வெற்றி! வெற்றி! வெற்றி!

## தீண்டாமை ஒழிப்பு உறுதிமொழி

**மாதம்: ஜனவரி** **நாள்: 30**

இந்திய அரசியலமைப்பின்பால் இடைவிடாத, உளமார்ந்த பற்றுள்ள இந்தியக் குடிமகன் / குடிமகள் ஆகிய நான், நமது அரசியலமைப்பின்படி தீண்டாமை ஒழிக்கப்பட்டுவிட்டது என்பதை அறிவேன். தீண்டாமையை அடிப்படையாகக் கொண்டு, எவர் மீதும் தெரிந்தோ, தெரியாமலோ சமூக வேற்றுமையை, மனம், வாக்கு, செயல் என்ற எந்த வகையிலும் கடைபிடிக்கமாட்டேன் என்று இதனால் உளமாற உறுதியளிக்கிறேன். அரசியலமைப்பின் அடிப்படைக் கருத்திற்கிணங்க சமய வேறுபாடற்ற சுதந்திர சமுதாயத்தை உருவாக்குவதில் நேர்மையுடனும், உண்மையுடனும் பணியாற்றுவது எனது கடமையாகும் என்பதையும் உணர்வேன். இந்திய

அரசியலமைப்பினால் எனக்குள்ள முழுப்பற்றிற்கு இது என்றென்றும் எடுத்துக்காட்டாக விளங்குமென்றும் இதனால் உளமாற உறுதியளிக்கிறேன்.

## கல்லூரியின் இலச்சினை

நீரில் உள்ள தாமரை மனிதன் தூயவனாகவும், மேலானவனாகவும் வாழக் கல்வி இன்றியமையாதது என்று உணர்த்துகிறது. புத்தகம் கற்றலையும், கற்பித்தலுமாகிய அறிவினைக் குறிக்கிறது. கல்வி என்னும் ஞான விளக்கு ஏற்றியோரிடத்து புல்லிய எண்ணம் என்னும் இருள் அணுகாது என்பதைத் தெளிவாகக் கூறுபவை; மாணவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கும், சமூக மற்றும் பொருளாதார மேம்பாட்டிற்கும் பயன்படுபவராக இருத்தல் வேண்டும் என்பதைக் குறிக்கிறது. ஏர் சின்னம் என்பது கல்லூரி அமைந்திருக்கும் இப்பகுதி விவசாயப்பபகுதி என்பதையும், உழவுத் தொழில் நாட்டின் வளர்ச்சிக்கு உதவுவது போல மாணவர்கள் இருத்தல் வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

## கல்லூரியின் வரலாறு

**தோற்றம்:**

செங்கல்பட்டு எம்.ஜி.ஆர். மாவட்டத்தில் முதன்முதலாகத் தமிழ்நாடு அரசினால் தொடங்கப்பட்ட கல்லூரி உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரியாகும். தமிழ்நாட்டின் இரண்டு தொழிலதிப வள்ளல்கள் திரு. சி.எஸ். உலகநாத முதலியார் அவர்களும், திரு. டி.எஸ். நாராயணசாமி அவர்களும் சேர்ந்து ரூபாய் ஐந்து இலட்சம் நன்கொடையாக இக்கல்லூரியைத் தொடங்க 1965-ல் வழங்கினார்கள். அத்துடன் தமிழ்நாடு அரசும் ரூபாய் மூன்று இலட்சம் மதிப்புள்ள கட்டிடங்களை 1965-லேயே கனிவுடன் வழங்கி இக்கல்லூரியைத் தொடங்கியது. கொடை வழங்கிய வள்ளல்களைக் கௌரவிக்கும் வகையில் இக்கல்லூரிக்கு அவர்களுடைய பெயர்கள் சூட்டப்பட்டுள்ளன. இக்கல்லூரியைத் தமிழ்நாடு அரசு நிர்வகிப்பதால் அதன் பெயரில் ‘அரசினர்’ என்ற சொல்லும் இடம் பெறுகிறது.

திருவள்ளூர் மாவட்டத்தில் திருவொற்றியூர் - பொன்னேரி சாலையில், பொன்னேரி இரயில் நிலையத்தின் அருகில் 60 ஏக்கர் பரப்பளவுள்ள வளாகத்தில் கல்லூரி இயங்கி வருகிறது. ஆகஸ்டு 1965-ல் நான்கு புகுமுக வகுப்புக்கள் தொடங்கப்பெற்றன. இதனால் சென்னை மாநகரின் வடக்கு எல்லையில் வாழ்கின்ற கிராமிய மக்களுக்கு உயர்கல்வி கிடைக்க வாய்ப்புகளும் ஏற்பட்டன. தற்பொழுது இக்கல்லூரியில், 5,075 மாணாக்கர் பயில வசதிகள் உண்டு.

**இளம் பட்ட வகுப்புகள்:**

1966-ஆம் ஆண்டில் வரலாறு மற்றும் கணிதவியல் பட்ட வகுப்புகள் தொடங்கப்பெற்றன. பின்னர் படிப்படியாக இயற்பியல், வேதியியல் மற்றும் தாவரவியல் பட்ட வகுப்புகளும் தொடங்கப்பட்டது.

1979-ல் புதுமுக வகுப்புகள் பல்கலைக்கழகத்திலிருந்து நீக்கப் பெற்றதால் கல்லூரியின் வளர்ச்சியில் ஒரு புத்துணர்ச்சி ஏற்பட்டது. மாணாக்கரின் எண்ணிக்கை குறைந்தாலும் மேல்பட்டப்படிப்புக் கல்லூரியாக இது வளர்ந்தது. 1979-80ஆம் ஆண்டில் ஆங்கில இலக்கியத்தில் பட்ட வகுப்பிற்குமான அறிந்தேற்பினைச் சென்னைப் பல்கலைக்கழகம் வழங்கியது. 1980-81ல் பட்ட வகுப்பில் அரசியல் அறிவியலும் முதன்மைப் பாடமாக்கப் பெற்றது. 1999-2000ஆம் கல்வி ஆண்டில் கணினி அறிவியல் பாட பட்ட வகுப்பும், 2012-2013ஆம் கல்வி ஆண்டில் தமிழ் இலக்கியம், இளம் வணிகவியல், கணினி பயன்பாட்டியல் ஆகிய பாடப்பிரிவுகளும் தொடங்கப்பட்டன. 2017-2018ஆம் கல்வியாண்டில் இளங்கலை பொருளாதாரம் மற்றும் **B.Com., (Cooperation)** ஆகிய பட்ட வகுப்புகள் தொடங்கப்பட்டது.

### சுழற்சி முறை கல்வித் திட்டம்:

2006-2007-ஆம் கல்வி ஆண்டு முதல் இக்கல்லூரியில் தமிழக அரசின் அறிவிப்பின்படி சுழற்சி முறை கல்வித் திட்டம் நடைமுறைக்கு வந்தது. அந்த ஆண்டில் சுழற்சி–2ல் இளம் பட்ட வகுப்புகளான வரலாற்றுப் படிப்பியல், வேதியியல், இயற்பியல், கணினி அறிவியல் மற்றும் தாவர உயிரியல் மற்றும் தாவர உயிரி தொழில்நுட்பவியல் ஆகிய பாடப்பிரிவுகள் தொடங்கப்பட்டன.

### பட்டமேற்படிப்புகள்:

1979-80-ஆம் ஆண்டில் வரலாறு மேல் பட்டப்படிப்பிற்கும், 1993-94ஆம் கல்வியாண்டில் அரசியல் அறிவியல் மேல் பட்டபடிப்பிற்கும் சென்னைப் பல்கலைக்கழகம் அனுமதி வழங்கியது.

2008-2009-ஆம் கல்வி ஆண்டில் முதுநிலை கணினி அறிவியல் பட்ட வகுப்பு துவங்கப் பெற்றது. 2012-2013-ஆம் கல்வி ஆண்டில் முதுகலையில் தமிழ் மற்றும் ஆங்கில இலக்கியமும், முதுநிலை அறிவியலில் இயற்பியல், வேதியியல், தாவரவியல் மற்றும் தாவர தொழில்நுட்பவியலில் பாடப்பிரிவுகளும், மற்றும் 2013-2014-ஆம் கல்வி ஆண்டில் முதுநிலை அறிவியல் கணிதவியல் வகுப்பும் தொடங்கப்பட்டது.

### ஆய்வு மேற்படிப்புகள்:

2013-2014ஆம் கல்வி ஆண்டில் முழு மற்றும் பகுதி நேர கணித ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டது. 2014-2015-ம் கல்வியாண்டில் தமிழ் துறையிலும் மற்றும் 2017-2018-ல் வேதியியல் துறையிலும் முழு மற்றும் பகுதி நேர ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்புகள் தொடங்கப்பட்டது. மேலும், 2013-2014-ல் தமிழ் மற்றும் கணிதம் ஆகிய துறைகளுக்கு பகுதி நேர முனைவர் பட்ட ஆய்வு மையங்கள் தொடங்க தமிழக அரசு ஆணையிட்டு, சென்னைப் பல்லைக்கழகம் அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### தேசியத்தர நிர்ணயம் மற்றும் தகுதிச் சான்றிதழ் குழு (NAAC):

பல்கலைக்கழக நிதி நல்கைக் குழுவினால் (UGC) அமைக்கப்பட்ட தேசியத் தர நிர்ணயம் மற்றும் தகுதிச் சான்றிதழ் வழங்கும் குழு National

Accreditation and Assessment Council (NAAC) இக்கல்லூரியின் தரத்தை 2002-2003-ஆம் ஆண்டில் மதிப்பீடு செய்து, C ப்ளஸ் தகுதி வழங்கி சிறப்பித்துள்ளது. 2014-2015-ஆம் கல்வி ஆண்டிற்கான தர மதிப்பீட்டின் சான்றினை மேம்படுத்துவதற்கான வல்லுநர் குழு நிர்ணயம் செய்யப்பட்டு அதற்கான பணிகள் பேணப்பட்டு வருகின்றன.

**முதல் நிலைக் கல்லூரி:**

2007-2008-ஆம் கல்வியாண்டு முதல், தமிழக அரசால் இக்கல்லூரி முதல்நிலைக் கல்லூரியாக தரம் உயர்த்தப்பட்டது.

**தன்னாட்சி:**

2011-2012-ஆம் கல்வி ஆண்டு முதல் பல்கலைக்கழக மானியக்குழுவால் தன்னாட்சி நிலை வழங்கப்பட்டுள்ளது. இதன் மூலம் காலத்திற்கேற்ற பாடத்திட்டங்களையும், வேலைவாய்ப்பிற்கேற்ற நுண்திறன் பயிற்சிகளையும் வழங்கி வருகிறது. மேம்படுத்தப்பட்ட தேர்வு முறைகளையும், தேர்வு முடிவுகளை உடனடியாக அறிவிப்பதில் கணினி அறிவியல் தொழில் நுட்பங்களைப் பயன்படுத்தி தன்னாட்சி நிலையைச் சிறப்பாக நிலைநாட்டி வருகிறது.

## முதல்வர்களின் வரிசைப் பட்டியல்

| | | |
|---|---|---|
| 1. | திருமதி **பி. விமலா**, எம்.எஸ்சி., | 1965 |
| 2. | திரு. **கே. ஆளுடையபிள்ளை**, எம்.காம்., பி.எல்., | 1965–1966 |
| 3. | திரு. **ப்பி. பிரபாகர்**, எம்.ஏ., எல்.டி., | 1966–1967 |
| 4. | திரு. **ஒய். ப்பி. இராமச்சந்திரன்**, எம்.காம், எல்.எல்.பி., | 1968–1969 |
| 5. | திரு. மேஜர் **ஏ. கிருஷ்ணமூர்த்தி**, எம்.ஏ., | 1969 |
| 6. | திரு. **ப்பி. வி. ஸ்ரீனிவாசன்**, எம்.ஏ., பி.டி., | 1970–1972 |
| 7. | திரு. **கே. வி. கிருஷ்ணமூர்த்தி**, எம்.எஸ்சி., | 1972–1973 |
| 8. | திரு. **எம். குப்புசாமி**, எம்.ஏ., | 1973–1974 |
| 9. | திரு. **எம். கே. தங்கவேலு**, எம்.ஏ., எம்.லிட்., | 1974–1976 |
| 10. | முனைவர் **என். சந்திரகாந்த் முதலியார்**, எம்.ஏ., பிஎச்.டி., | 1976–1980 |
| 11. | திரு. **ப்பி. பத்மநாபன்**, எம்.ஏ., | 1980–1982 |
| 12. | திரு. **ப்பி. எஸ். கந்தசாமி**, பி.காம்., (ஆனர்சு) | 1982 |
| 13. | முனைவர் **வி. சுப்பிரமணியம்**, எம்.ஏ., பிஎச்.டி., | 1982–1984 |
| 14. | முனைவர் **ஆர். இராஜாராமன்**, எம்.எஸ்சி., பிஎச்.டி., | 1984–1986 |
| 15. | முனைவர் **ப்பி. வி. ராஜ்குமார்**, எம்.ஏ., எம்.லிட்., பிஎச்.டி., | 1986–1989 |
| 16. | திரு. **ஆர். சுப்பிரமணியன்**, எம்.ஏ., எம்.ஃபில்., | 1989–1990 |
| 17. | முனைவர் **டி. கே. பழனிசாமி**, எம்.ஏ., பிஎச்.டி., | 1990–1991 |
| 18. | திரு. **கூ. கருப்பன்**, எம்.காம்., | 1992–1993 |
| 19. | முனைவர் **எம். மித்ரா**, எம்.ஏ., பிஎச்.டி., | 1993–1994 |

20. திரு. **கூ. கருப்பன்**, எம்.காம்., 1994–1995

21. திருமதி **தமயந்தி சிவராமன்**, எம்.ஏ., 1996–1997

22. முனைவர் திருமதி **டி. எஸ். கௌரி**, எம்.ஏ., பிஎச்.டி., 1997–2000

23. முனைவர் **சி. கே. சிதம்பரகுமாரசுவாமி**, எம்.ஏ., பிஎச்.டி., 2000–2001

24. திரு. **எஸ். சங்கரன்**, எம்.காம்., எம்.ஃபில்., 2001–2002

25. முனைவர் **ரா. ராமநாராயணன்**, எம்.எஸ்சி., பிஎச்.டி., 2002–2003

26. திரு. **மு. தனுஷ்கோடி**, எம்.ஏ., எம்.ஃபில்., 2003–2004

27. திரு. **க. விஜயசனப் பெருமாள்**, எம்.ஏ., எம்.ஃபில்., 2004–2006

28. முனைவர் திருமதி **மு. இரா. சஃப்ரா பேகம்**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., எம்.ஏ., (ஆங்கிலம்), எம்.ஏ., (இதழியல்), டி.சி.ஏ., டி.டி.ஜி.டி., 2006–2007

## முதல்நிலை முதல்வர்களின் வரிசைப் பட்டியல்

29. முனைவர் **இல. வெங்கடசாமி**, எம்.ஏ., பி.எல்., எம்.ஃபில்., பிஎச்.டி., 2007–2008

30. முனைவர் **ட்டி. ஜி. குமரன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி., 2008–2009

31. திருமதி **ச. மங்கையர்கரசி**, எம்.ஏ., எம்.ஃபில்., 2009–2010

32. முனைவர் **வெ. வீரபத்திரன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி., (பொறுப்பு) 2010

33. திருமதி **பெ. அல்லி**, எம்.ஏ., எம்.ஃபில்., 2010–2011

34. முனைவர் **வெ. வீரபத்திரன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி., (பொறுப்பு) 2011–2012

35. முனைவர் திருமதி **ஆ.ஆ. பொன்முடி சுடரொளி**, எம்.ஏ., எம்.ஏ.,(சமூக.), எம்.ஏ.,(அ.அ), எம்.ஏ.,(கா.நி), எம்.ஃபில்., பிஎச்.டி., (பொறுப்பு) 2012

36. முனைவர் **வெ. வீரபத்திரன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி., 2012–2014

37. முனைவர் **இரா. சீனிவாசன்**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி., (பொறுப்பு) 01.06.’14 – 30.06.’14

38. முனைவர் திருமதி **சு. சந்திரா**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி., 01.07.’14 – 03.08.’15

39. முனைவர் **அ. ஜோசப் துரை**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி., 03.08.’15 – 31.5.’16

40. முனைவர் **இரா. சீனிவாசன்**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி., (பொறுப்பு) 01.06.’16 – 27.10.’16

41. முனைவர் திருமதி **இரா. பானுமதி**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி., 28.10.’16 – 31.05.’17

42. முனைவர் **இரா. சீனிவாசன்**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி., (பொறுப்பு) 01.06.’17 – 02.08.’17

43. முனைவர் **அ. கருப்பன்**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி., பி.எல்., 03.08.’17 - 31.05.’18

44. முனைவர் **இரா. சீனிவாசன்**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி., (பொறுப்பு) 01.06.’18 – 04.06.’18

45. முனைவர் **ச. அந்தோணி டேவிட் நாதன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., (பொறுப்பு) — 05.06.'18 - 29.06.'18

46. முனைவர் **இரா. சீனிவாசன்,** எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி., — 30.06.2018 முதல்

## தேர்வுக்கட்டுப்பாட்டு அலுவலர் பட்டியல்

1. முனைவர் **சி.கி. இலட்சுமணப்பெருமாள்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி., — 17-06-2011 – 31-05-2013
   இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், இயற்பியல் துறை

2. முனைவர் **அ. யூசுப் கான்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி., — 05-06-2013 – 27-02-2016
   இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், விலங்கியல் துறை

3. முனைவர் **மா. திருச்சேரன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி., — 02-08-2016 – முதல்
   இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர், கணிதவியல் துறை

## முதல்வர்

## முனைவர் **இரா. சீனிவாசன்,** எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி.,

**(Grade – I Principal)**

## தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்

முனைவர் **மா. திருச்சேரன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,

## கல்லூரி ஆசிரியர்கள் பெயர் பட்டியல்

## தமிழ்த்துறை

1. முனைவர் **ச. அந்தோணி டேவிட் நாதன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. முனைவர் **சிவ. முருகேசன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி., டிப்ளமோ (சைவ சித்தாந்தா மற்றும் இந்தி)
   உதவிப் பேராசிரியர்
3. முனைவர் **ப. தேவராஜ்,** எம்.ஏ., (தமிழ்), எம்.ஏ., (வரலாறு), எம்.ஃபில்., பிஎச்.டி., பி.ஜி.டி.சி.ஏ.,
   உதவிப் பேராசிரியர்
4. முனைவர் **த. அருள்பத்மராசன்,** எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ., (சமூகவியல்), எம்.ஃபில்., எம்.எட்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
5. முனைவர் திருமதி **தா. குளோரி,** எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ., (வரலாறு), எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
6. முனைவர் **மு. இராமு,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
7. முனைவர் **து. பார்த்திபன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
8. முதல் 15. காலிப்பணியிடம்

## ஆங்கிலத்துறை

1. முனைவர் **ரா. கௌரிசங்கர்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. திரு. **கா. சொர்ணமுத்துராஜ்,** எம்.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
3. திரு. **சு. சரவணன்,** எம்.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
4. முனைவர் திருமதி **கு.பு. ஸ்ரீகலா,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்
5. திருமதி **கோ. சண்முகப்பிரியா,** எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
6. முனைவர் **த. பிரபு,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்
7. திரு. **வா.மு. மகேந்திரன்,** எம்.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
8. முனைவர் **சி.எஸ். இராபின்சன்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்
9. முனைவர் திருமதி **ந. ஜெயஸ்ரீ,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்
10. திருமதி **ஆ. செந்தாமரை,** எம்.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
11. முதல் 14. காலிப்பணியிடம்

## வரலாற்றுத்துறை

1. முனைவர் **இரா. அந்தோணிராஜ்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., எம்.எல்., (தொழிலாளர் சட்டம்), எம்.எல்., (Contracts) பி.எட்., பிஜி டிப்ளமோ: குற்றவியல் மற்றும் தடயவியல், பிஜி டிப்ளமோ: சைபர் சட்டம்
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. முனைவர் **ஐ. தேவகுமார்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர் (நீடிய விடுப்பு)
3. முனைவர் **கோ. கோ. ஏசுபாதம்,** எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்
4. திரு. **எஸ். ஜேசுதாஸ் ஆரோக்கியம்,** எம்.ஏ., எம்.பி.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
5. முதல் 13. காலிப்பணியிடம்

## அரசியல் அறிவியல் துறை

1. முனைவர் **ஜெ. பிரபாகரன்,** எம்.ஏ., (அ.அ.,), எம்.ஏ., (பொ நி.,), பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. முதல் 3. காலிப்பணியிடம்

## வணிகவியல் துறை

1. திரு. **டி. கிருபாநந்தன்,** எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.டி.பி.எம். & அய்.ஆர்.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. முதல் 6. காலிப்பணியிடம்

## பொருளாதாரத் துறை

1. முதல் 2. காலிப்பணியிடம்

## கூட்டுறவியல்

1. முதல் 2. காலிப்பணியிடம்

## கணிதவியல் துறை

1. முனைவர் **மா. திருச்சேரன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. முனைவர் திருமதி **வ. அன்னம்மா,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்
3. முனைவர் **மு. ப. ஜெயராமன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்
4. திரு. **க. சிவராமன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
5. திரு. **வி.கு. பாலாஜி,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
6. திரு. **தி.கோ. பாஸ்கர்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
7. முனைவர் திருமதி **ஏ. இரத்தினகுமாரி,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
8. திரு. **பு. ராஜகுரு,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
9. திருமதி **ப. கவிதா,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
10. திரு. **சீ. கார்த்திகேயன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
11. காலிப்பணியிடம்

## கணினி அறிவியல்

1. முனைவர் திருமதி **சீ. வெங்கடேஸ்வரி,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. திருமதி **ப. எழில்,** எம்.எஸ்சி., எம்.சி.ஏ., எம்.பி.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்
3. முனைவர் **ந. கிருஷ்ணமூர்த்தி,** எம்.சி.ஏ., எம்.ஃபில்., எம்.பி.ஏ.,
உதவிப் பேராசிரியர் எம்.காம்., எம்.ஃபில்., பிஎச்.டி.,
4. முதல் 6. காலிப்பணியிடம்

## கணினி பயன்பாட்டியல் துறை

1. திருமதி **இரா. சுபத்திரா தேவி**, எம்.சி.ஏ., எம்.ஃபில்.,
   உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. முதல் 6. காலிப்பணியிடம்

## இயற்பியல் துறை

1. முனைவர் **ஆர். சாமுவேல் செல்வராஜ்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்
2. முனைவர் **ஆ. கந்தசாமி**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர் எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., (இந்தி)
3. முனைவர் **கி. ஸ்ரீனிவாசன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
4. திரு. **சு. மகாலிங்கம்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
5. முனைவர் **கி. செந்தில் குமார்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
6. முனைவர் **சீ. தேவசங்கர்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
7. முனைவர் **இல. மாரியப்பன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
8. முதல் 13. காலிப்பணியிடம்

## வேதியியல் துறை

1. திரு. **சி. கண்ணன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., எம்.பி.ஏ., பி.ஜி.டி.ஜி.சி.,
   உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (ரூசா - மாற்றுப்பணி)
2. திருமதி **இரா. பு. மீனா**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பி.எட்.,
   உதவிப் பேராசிரியர்
3. முனைவர் **சு. செந்தில்குமார்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
4. திரு. **நூ. அப்சர்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
   உதவிப் பேராசிரியர்
5. முனைவர் **ச. ஜார்ஜ்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
6. முனைவர் திருமதி **கி. ஜெயந்தி**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
7. முனைவர் **ஆ. ரமேஷ்,** எம்.எஸ்சி., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்
8. முனைவர் **சு. மஞ்சுநாதன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்

9. முனைவர் **க.நா. மாரிமுத்து**, எம்.எஸ்சி., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்

10. முனைவர் **ச. மரிய ராயப்பன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்

11. முனைவர் **செ. ஈசாக்கு**, எம்.எஸ்சி., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்

12. முனைவர் திருமதி **வித்யாவதி பால்ராஜ்**, எம்.எஸ்சி., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்

13. காலிப்பணியிடம்

## தாவர உயிரியல் (ம) தாவர உயிரி தொழில்நுட்பவியல் துறை

1. முனைவர் **ஜோ. சேகர்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் (அண்ணாமலைப் பல்கலைக்கழகம் - உபரிப் பணி)
2. முதல் 10. காலிப்பணியிடம்

## விலங்கியல் துறை

1. முனைவர் **கோ. சந்திரமோகன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பி.ஜி.டி.எம்.எல்.டி., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

2. காலிப்பணியிடம்

## உடற்கல்வித் துறை

1. முனைவர் **அரங்க. பண்பில் நாதன்** எம்.ஏ., (அ.அ.,), எம்.ஏ., (பொ நி.,), பிஎச்.டி.,
உடற்கல்வி இயக்குநர்

2. உடற்கல்வி பயிற்றுநர் – காலிப்பணியிடம்

## கூடுதல் தேர்வுக் கட்டுப்பாட்டு அலுவலர்கள்

1. முனைவர் **சிவ. முருகேசன்**, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
2. காலிப்பணியிடம்

## நூலகம்

1. முனைவர் திருமதி **மு. கிரேஸ்**, பி.எஸ்சி., எம்.ஏ., (பொ.நி.), எம்.எல்.ஐ.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
நூலகர்

## ACADEMIC COUNCIL MEMBER – UNIVERSITY OF MADRAS

முனைவர் **சு. மஞ்சுநாதன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை

## STATUTORY COMMITTEES

## COMMITTEE FOR SC/ST

**Convener** : முனைவர் **இரா. சீனிவாசன்**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி.,
முதல்வர்

**Coordinator** : முனைவர் **மா. திருச்சேரன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
இணைப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், கணிதத்துறை

| | | |
|---|---|---|
| **Member** | : | முனைவர் திருமதி **தா. குளோரி**, எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ., (வரலாறு),<br>உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை எம்.ஃபில்., பிஎச்.டி., |

## INTERNAL COMPLIANT COMMITTEE

| | | |
|---|---|---|
| **Convener** | : | முனைவர் **இரா. சீனிவாசன்**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி.,<br>முதல்வர் |
| **Coordinator** | : | திருமதி **இரா. பு. மீனா**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பி.எட்.,<br>உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை |
| **Member** | : | திருமதி **கோ. சண்முகப்பிரியா**, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,<br>உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை |

## MINORITY CELL

| | | |
|---|---|---|
| **Convener** | : | முனைவர் **இரா. சீனிவாசன்**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி.,<br>முதல்வர் |
| **Coordinator** | : | திரு. **நூ. அப்சர்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்.,<br>உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை |
| **Member** | : | முனைவர் **ச. ஜார்ஜ்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,<br>உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை |

## OBC CELL

| | | |
|---|---|---|
| **Convener** | : | முனைவர் **இரா. சீனிவாசன்**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி.,<br>முதல்வர் |
| **Coordinator** | : | முனைவர் திருமதி **சீ. வெங்கடேஸ்வரி**, எம்.எஸ்சி., எம்.ஃபில்.,<br>உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர் பிஎச்.டி., |
| **Member** | : | முனைவர் **சு. செந்தில்குமார்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,<br>உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை |

## GRIEVANCE REDRESSAL COMMITTEE

| | | |
|---|---|---|
| **Convener** | : | முனைவர் **இரா. சீனிவாசன்**, எம்.ஏ.,எம்.ஃபில்., பிஎச்.டி.,<br>முதல்வர் |
| **Coordinator** | : | முனைவர் **ச. அந்தோணி டேவிட் நாதன்**, எம்.ஏ., எம்.ஃபில்.,<br>இணைப் பேராசிரியர் மற்றும் தமிழ் துறைத்தலைவர் பிஎச்.டி., |
| **Members** | : | முனைவர் **வ. அன்னம்மா**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,<br>உதவிப் பேராசிரியர், கணிதத் துறை |
| | : | திரு. **எஸ். ஜேசுதாஸ் ஆரோக்கியம்**, எம்.ஏ., எம்.பி.ஏ.,<br>உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை எம்.ஃபில்., |
| | : | திருமதி **ப. எழில்**, எம்.எஸ்சி., எம்.சி.ஏ., எம்.பி.ஏ., எம்.ஃபில்.,<br>உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல் துறை |

## UGC / STATE FUND

1. முனைவர் திருமதி **வ. அன்னம்மா**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர்

2. முனைவர் **சு. மஞ்சுநாதன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
   உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை

3. திரு. **டி. கிருபாநந்தன்,** எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.டி.பி.எம். & அய்.ஆர்.,
உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை

4. முனைவர் **ஜெ. பிரபாகரன்,** எம்.ஏ., (அ.அ.,), எம்.ஏ., (பொ நி.,), பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர்

## PLACEMENT CELL

1. முனைவர் **சீ. தேவசங்கர்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், இயற்பியல் துறை

2. திரு. **க. சிவராமன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர்

3. திரு. **சீ. கார்த்திகேயன்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், கணிதத் துறை

4. முனைவர் **ப. தேவராஜ்,** எம்.ஏ., (தமிழ்), எம்.ஏ., (வரலாறு),
உதவிப் பேராசிரியர் எம்.ஃபில்., பிஎச்.டி., பி.ஜி.டி.சி.ஏ.,

5. முனைவர் **க.நா. மாரிமுத்து,** எம்.எஸ்சி., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்

## PURCHASE COMMITTEE

1. திரு. **வி.கு. பாலாஜி,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், கணிதவியல் துறை

2. திரு. **சு. சரவணன்,** எம்.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை

3. முனைவர் **ப. தேவராஜ்,** எம்.ஏ., (தமிழ்), எம்.ஏ., (வரலாறு),
உதவிப் பேராசிரியர் எம்.ஃபில்., பிஎச்.டி., பி.ஜி.டி.சி.ஏ.,

4. முனைவர் **த. பிரபு,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை

## மகளிர் குறைதீர்க்கும் குழு / பாலியல் புகார் விசாரணைக்குழு

1. முனைவர் திருமதி **வ. அன்னம்மா,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், கணிதத் துறை

2. திருமதி **இரா. பு. மீனா,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பி.எட்.,
உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை

3. முனைவர் திருமதி **தா. குளோரி,** எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ., (வரலாறு), எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை பிஎச்.டி.,

4. திருமதி **கோ. சண்முகப்பிரியா,** எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை

5. முனைவர் திருமதி **மு. கிரேஸ்,** பி.எஸ்சி., எம்.ஏ., (பொ.நி.), எம்.எல்.ஐ.எஸ்சி.,
நூலகர் எம்.ஃபில்., பிஎச்.டி.,

## UGC செயற்குழு

1. திரு. **வி.கு. பாலாஜி,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், கணிதவியல் துறை

2. முனைவர் **ஆ. கந்தசாமி**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர் எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., (இந்தி)

3. திரு. **டி. கிருபாநந்தன்,** எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.டி.பி.எம். & அய்.ஆர்.,
உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை

4. முனைவர் **சு. மஞ்சுநாதன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை

5. முனைவர் **இரா. அந்தோணிராஜ்**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., எம்.எல்
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், வரலாற்றுத் துறை

6. முனைவர் **த. பிரபு**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை

## ANTI-RAGGING COMMITTEE

1. முனைவர் **சிவ. முருகேசன்**, எம்.ஏ., எம்.ஃபில்., பி.எட்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை

2. திரு. **கா. சொர்ணமுத்துராஜ்**, எம்.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், ஆங்கிலத் துறை

3. திருமதி **கோ. சண்முகப்பிரியா**, எம்.ஏ., பி.எட்., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை

## IQAC / NAAC

1. முனைவர் **சு. மஞ்சுநாதன்**, எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், வேதியியல் துறை

2. முனைவர் **கி. செந்தில் குமார்,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர்

3. திரு. **எஸ். ஜேசுதாஸ் ஆரோக்கியம்**, எம்.ஏ., எம்.பி.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், வரலாற்றுத் துறை

4. முனைவர் திருமதி **கு.பு. ஸ்ரீகலா,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை

5. திரு. **வி.கு. பாலாஜி,** எம்.எஸ்சி., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், கணிதவியல் துறை

6. முனைவர் **இரா. அந்தோணிராஜ்**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., எம்.எல்
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், வரலாற்றுத் துறை

7. முனைவர் **த. பிரபு**, எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், ஆங்கிலத் துறை

## SPORTS COMMITTEE

1. முனைவர் **ஜெ. பிரபாகரன்,** எம்.ஏ., (அ.அ.,), எம்.ஏ., (பொ நி.,), பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், அரசியல் அறிவியல் துறை,
2. திரு. **டி. கிருபாநந்தன்,** எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.டி.பி.எம். & அய்.ஆர்.,
உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை
3. முனைவர் திருமதி **மு. கிரேஸ்,** பி.எஸ்சி., எம்.ஏ., (பொ.நி.), எம்.எல்.ஐ.எஸ்சி.,
நூலகர் எம்.ஃபில்., பிஎச்.டி.,

## DISCIPLINE COMMITTEE

1. **அனைத்துத் துறைத்தலைவர்கள்**

## LIBRARY COMMITTEE

1. முனைவர் திருமதி **மு. கிரேஸ்,** பி.எஸ்சி., எம்.ஏ., (பொ.நி.), எம்.எல்.ஐ.எஸ்சி.,
நூலகர் எம்.ஃபில்., பிஎச்.டி.,
2. முனைவர் **ப. தேவராஜ்,** எம்.ஏ., (தமிழ்), எம்.ஏ., (வரலாறு),
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை எம்.ஃபில்., பிஎச்.டி., பி.ஜி.டி.சி.ஏ.,
3. திருமதி **ப. எழில்,** எம்.எஸ்சி., எம்.சி.ஏ., எம்.பி.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், கணினி அறிவியல் துறை

## அலுவலக அமைச்சுப் பணியாளர்கள்

1. திருமதி **ஓ.மா. விஜயகுமார்,** பி.பி.ஏ., எம்.ஏ., பி.காம்., – நிதியாளர்
2. திரு. **கா. தமிழ்வேந்தன்,** – கண்காணிப்பாளர்
3. உதவியாளர் – காலிப்பணியிடம்
4. திரு. **எம். பொன்னரசு,** டிப்ளமோ மெக்கானிக் – இளநிலை உதவியாளர்
5. இளநிலை உதவியாளர் – காலிப்பணியிடம்
6. தட்டச்சர் – காலிப்பணியிடம்
7. தட்டச்சர் – காலிப்பணியிடம்
8. திரு. **இரா. தீனதயாளன்,** எம்.சி.ஏ., எம்.ஃபில்., - (தே.நி.) கணினி நிரளாளர்
9. திரு. **வி. ராஜா** – பண்டகக் காப்பாளர்
10. திரு. **வே. பாலமுருகன்**, டிஇஇஇ., பி.காம்., எம்.பி.ஏ.,
பயிற்சி கற்பிப்பாளர்- இயற்பியல் துறை

## ஆய்வக உதவியாளர்கள்

1. திரு.**கே.என். குமரேசன்**, ஆய்வுக உதவியாளர், தேர்வு நிலை,
விலங்கியல் துறை
2. திரு. **க. ஏழுமலை**, ஆய்வுக உதவியாளர், தேர்வு நிலை,
தாவரவியல் துறை
3. திரு. **கி. நீலமேகன்**, ஆய்வுக உதவியாளர், தேர்வு நிலை,
இயற்பியல் துறை
4. திரு. **கோ. பாலாஜி**, பி.ஏ., பி.எல்.ஐ.எஸ்., ஆய்வுக உதவியாளர்,
வேதியியல் துறை

5. திருமதி. **அமுதா,** ஆய்வுக உதவியாளர், இயற்பியல் துறை
6. திரு. **ந. புனிதன்,** ஐ.டி.ஐ., வேதியியல் துறை
7. திருமதி **க. இந்திரா -** வேதியியல் துறை
8. முதல் 11. காலிப்பணியிடம்

## அலுவலக உதவியாளர்கள்

1. திரு. **எஸ். சுதாகர்,** சிறப்பு நிலை அலுவலக உதவியாளர்
2. திரு. **என். தண்டபாணி,** சிறப்பு நிலை அலுவலக உதவியாளர்
3. முதல் 5. காலிப்பணியிடம்

## அடிப்படை ஊழியர்கள்

1. திரு. **பெ. கொண்டையா,** (தே.நி) – துப்புரவாளர்
2. திரு. **கா. கோபிநாத்,** (தே.நி) – தோட்டக்காரர்
3. பெருக்குபவர் – காலிப்பணியிடம்
4. திரு. **என். ஜானகிராமன்** – பெருக்குபவர்
5. திரு. **கெ. கௌதம்ராஜ்** – பெருக்குபவர்
6. பெருக்குபவர் – காலிப்பணியிடம்
7. பெருக்குபவர் – காலிப்பணியிடம்
8. திரு. **ம. பாக்கியராஜ்** – குறியீட்டாளர்
9. இரவுக்காவலர் – காலிப்பணியிடம்
10. இரவுக்காவலர் – காலிப்பணியிடம்
11. நீர் கொணர்பவர் – காலிப்பணியிடம்
12. தோட்டக்காரர் – காலிப்பணியிடம்

## கல்லூரியில் செயல்பட்டு வரும் திறன் வளர்க்கும் அமைப்புகள்

1. நாட்டுநலப் பணித்திட்டம் (NSS)

அலகு – 1: முனைவர் **தா. குளோரி,** எம்.ஏ.,(தமிழ்), எம்.ஏ., (வரலாறு), எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், தமிழ்த் துறை

அலகு – 2: முனைவர் **இரா. அந்தோணிராஜ்,** எம்.ஏ., எம்.ஃபில்., பிஎச்.டி., எம்.எல்
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், வரலாற்றுத் துறை

அலகு – 3: முனைவர் **ஜெ. பிரபாகரன்,** எம்.ஏ., (அ.அ.,), எம்.ஏ., (பொ நி.,), பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர் மற்றும் துறைத்தலைவர், அ. அறிவியல் துறை

2. செஞ்சிலுவை சங்கம் (YRC)

திருமதி **இரா. சுபத்திரா தேவி,** எம்.சி.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர் மற்றும் கணினி பயன்பாட்டியல் துறைத்தலைவர்

3. செஞ்சுருள் சங்கம் (RRC)

முனைவர் **ப. தேவராஜ்,** எம்.ஏ., (தமிழ்), எம்.ஏ., (வரலாறு), எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை பிஎச்.டி., பி.ஜி.டி.சி.ஏ.,

4. நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு (Consumer Rights)

முனைவர் **ஆ. கந்தசாமி,** எம்.எஸ்சி., எம்.ஃபில்., பிஎச்.டி.,
உதவிப் பேராசிரியர், இயற்பியல் துறை எம்.ஏ., பி.எட்., பிஎச்.டி., (இந்தி)

5. தொழில் முனைவோர் மேம்பாட்டு மையம்
**(Enterpreneurship Development Cell)**
திரு. **டி. கிருபாநந்தன்,** எம்.காம்., எம்.ஃபில்., பி.ஜி.டி.பி.எம். & அய்.ஆர்.,
உதவிப் பேராசிரியர், வணிகவியல் துறை

## பயிற்றுவிக்கும் பாடங்கள்
## இளநிலை பட்ட வகுப்புகள்

| வ. எண். | முதன்மைப்பாடம் | பயிற்றுமொழி |
|---|---|---|
| **சுழற்சி – I (09.00 a.m. – 1.35 p.m.)** | | |
| **பி.ஏ., பாடப்பிரிவுகள்** | | |
| 1. | தமிழ் | தமிழ் |
| 2. | ஆங்கிலம் | ஆங்கிலம் |
| 3. | வரலாற்றுப் படிப்பியல் | ஆங்கிலம் (ம) தமிழ் |
| 4. | அரசியல் அறிவியல் | ஆங்கிலம் |
| 5. | பொருளியல் | ஆங்கிலம் (ம) தமிழ் |
| **பி.எஸ்ஸி., பாடப்பிரிவுகள்** | | |
| 6. | கணிதவியல் | ஆங்கிலம் (ம) தமிழ் |
| 7. | இயற்பியல் | ஆங்கிலம் (ம) தமிழ் |
| 8. | வேதியியல் | ஆங்கிலம் (ம) தமிழ் |
| 9. | தாவர உயிரியல் மற்றும் தாவர உயிரி தொழில்நுட்பவியல் | ஆங்கிலம் (ம) தமிழ் |
| 10. | கணினி அறிவியல் | ஆங்கிலம் |
| **பி.சி.ஏ.,** | | |
| 11. | கணினி பயன்பாட்டியல் | ஆங்கிலம் |
| **பி.காம்.,** | | |
| 12. | வணிகவியல் | ஆங்கிலம் |
| 13. | கூட்டுறவியல் | ஆங்கிலம் |
| **சுழற்சி – II (01.25 p.m. – 05.55 p.m.)** | | |
| **பி.ஏ.,** | | |
| 14. | வரலாற்றுப் படிப்பியல் | தமிழ் |
| **பி.எஸ்ஸி., பாடப்பிரிவுகள்** | | |
| 15. | இயற்பியல் | தமிழ் |
| 16. | வேதியியல் | தமிழ் |
| 17. | தாவர உயிரியல் மற்றும் தாவர உயிரி தொழில்நுட்பவியல் | தமிழ் |
| 18. | கணினி அறிவியல் | ஆங்கிலம் |

# முதுநிலைப்பட்ட வகுப்பு

| வ. எண். | முதன்மைப்பாடம் | பயிற்றுமொழி |
|---|---|---|
| **எம்.ஏ., பாடப்பிரிவுகள்** | | |
| 1. | தமிழ் | தமிழ் |
| 2. | ஆங்கிலம் | ஆங்கிலம் |
| 3. | வரலாற்று படிப்பியல் | ஆங்கிலம் |
| 4. | அரசியல் அறிவியல் | ஆங்கிலம் |
| **எம்.எஸ்சி., பாடப்பிரிவுகள்** | | |
| 5. | கணிதவியல் | ஆங்கிலம் |
| 6. | இயற்பியல் | ஆங்கிலம் |
| 7. | வேதியியல் | ஆங்கிலம் |
| 8. | தாவர உயிரியல் மற்றும் தாவர தொழில்நுட்பவியல் | ஆங்கிலம் |
| 9. | கணினி அறிவியல் | ஆங்கிலம் |
| **முதுநிலை ஆய்வியல் நிறைஞர் பட்டப்படிப்பு (எம்.ஃபில்.,)** | | |
| 10. | கணிதவியல் (முழு மற்றும் பகுதி நேரம்) | ஆஙகிலம் |
| 11. | தமிழ் (முழு மற்றும் பகுதி நேரம்) | தமிழ் |
| 12. | வேதியியல் (முழு மற்றும் பகுதி நேரம்) | ஆங்கிலம் |
| **ஆராய்ச்சிப் பட்டப்படிப்பு (பிஎச்.டி.,)** | | |
| 13. | கணிதவியல் (முழு மற்றும் பகுதி நேரம்) | ஆங்கிலம் |
| 14. | தமிழ் (பகுதி நேரம்) | தமிழ் |
| 15. | வணிகவியல் (பகுதி நேரம்) | ஆங்கிலம் |

# முக்கிய அறிவிப்புகள்

1. கல்லூரியில் வகுப்புகள் சுழற்சி முறையில் நடைபெறும். சுழற்சி-I (Shift-I) காலை 09.00 முதல் பிற்பகல் 01.35 மணி வரையிலும், சுழற்சி-II (Shift-II) பிற்பகல் 01.25 முதல் மாலை 05.55 மணி வரையிலும் இயங்கும்.
2. கல்லூரியில் சுழற்சி – Iல் பயிற்றுவிக்கப்படும் சில பாடப்பிரிவுகள் மட்டும் சுழற்சி – II-ல் பயிற்றுவிக்கப்படுகிறது.
3. மாணவர்கள் ஒரே விண்ணப்பத்தில் விருப்புரிமை அடிப்படையில் விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு முதன்மைப் பாடத்திற்கும் தனித்தனியாக விண்ணப்பிக்கத் தேவையில்லை. அம்மாணவரின் மதிப்பெண் அடிப்படையில் அனைத்து துறை கலந்தாய்வுகளிலும் இடம் பெறலாம்.
4. மாணவர் சேர்க்கை ஒற்றைச் சாளர முறை (Single Window System) பின்பற்றப்படும்.
5. தமிழக அரசின் ஆணைப்படி 2007-2008-ம் கல்வியாண்டு முதல் பட்டப்படிப்பு மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் (Tuition Fees) ஏதும் இல்லை.
6. மாணவர் சேர்க்கை எண்ணிக்கையைப் பொறுத்து சுழற்சி-IIல் பாடங்கள் பயிற்றுவிக்கப்படும்.

## 2017 – 2018ஆம் கல்வியாண்டில் கற்பிக்கப்படும் பாடங்களும் அனுமதிக்கப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கையும்

| வ.எண். | பாடப்பிரிவு | சுழற்சி – I | | சுழற்சி – II | |
|---|---|---|---|---|---|
| | | தமிழ் வழி | ஆங்கில வழி | தமிழ் வழி | ஆங்கில வழி |
| **பி.ஏ.,** | | | | | |
| **1.** | தமிழ் | **70** | - | - | - |
| **2.** | ஆங்கிலம் | - | **70** | - | - |
| **3.** | வரலாற்று படிப்பியல் | **70** | **70** | **70** | |
| **4.** | அரசியல் அறிவியல் | **70** | - | - | - |
| **5.** | பொருளியல் | **70** | **70** | - | - |
| **பி.காம்.,** | | | | | |
| **6.** | வணிகவியல் | - | **70** | - | - |
| **7.** | கூட்டுறவியல் | - | **70** | - | - |
| **பி.சி.ஏ.,** | | | | | |
| **8.** | கணினி பயன்பாட்டியல் | - | **35** | - | - |
| **பி.எஸ்ஸி.,** | | | | | |
| **9.** | வேதியியல் | **50** | **50** | **50** | - |
| **10.** | இயற்பியல் | **50** | **50** | **50** | - |
| **11.** | கணிதவியல் | **50** | **50** | - | - |
| **12.** | கணினி அறிவியல் | - | **50** | - | **50** |
| **13.** | தாவர உயிரியல் | **50** | **50** | **50** | - |
| **எம்.ஏ.,** | | | | | |
| **14.** | தமிழ் | **26** | - | - | - |
| **15.** | ஆங்கிலம் | - | **26** | - | - |
| **16.** | வரலாற்று படிப்பியல் | - | **40** | - | - |
| **17.** | அரசியல் அறிவியல் | - | **40** | - | - |
| **எம்.எஸ்சி.,** | | | | | |
| **18.** | வேதியியல் | - | **26** | - | - |
| **19.** | இயற்பியல் | - | **20** | - | - |
| **20.** | கணிதவியல் | - | **40** | - | - |
| **21.** | கணினி அறிவியல் | - | **26** | - | - |
| **22.** | தாவர உயிரியல் | - | **26** | - | - |

# கல்லூரியில் சேர்வது மற்றும் விலகுவது பற்றிய தமிழ்நாடு அரசு கல்வி விதிகள்

1. கல்லூரியில் புதிதாகச் சேரும் மாணவர்கள் முன்னர்ப் பயின்ற கல்லூரி அல்லது பள்ளிகளிலிருந்து வழங்கப்பட்ட மாற்றுச் சான்றிதழ் அளித்தால் மட்டுமே சேர்வதற்கு அனுமதிக்கப்படுவர்.
2. தவறான சான்றுகளின் அடிப்படையில் கல்லூரியில் இடம் பெற்ற மாணவர்கள், தாங்கள் செலுத்திய கட்டணங்களை இழப்பதுடன் கல்லூரியிலிருந்தும் விலக்கப்படுவர்.
3. மாணவர்கள் முதற்பருவத்தின் தொடக்கத்தில் மட்டுமே சேர்த்துக் கொள்ளப்படுவர்.
4. மாணவர்கள் முதற்பருவத் தொடக்கத்தில் முதல் தவணைக் கட்டணம் அல்லது கட்டணம் முழுமையும் செலுத்தாத நிலையில் வகுப்பிற்குச் செல்ல அனுமதிக்கப்படமாட்டார்கள்.
5. ஒரு பருவத்திடையே கல்லூரியை விட்டுச் செல்லும் மாணவர்கள், கட்டணத்தின் எந்த ஒரு பகுதியையும் திரும்பக் கோர உரிமை கிடையாது.
6. கட்டணங்களை முழுமையாகச் செலுத்திய பின்னர் கல்லூரியை விட்டு நீங்கும் மாணவர்கள், மாற்றுச் சான்றிதழ் வேண்டி, அன்னார் விலகிய நாள் முதற்கொண்டு ஓராண்டிற்குள் விண்ணப்பிக்க வேண்டும். ஓராண்டிற்குப் பின்னர் சான்றிதழ் பெறுவதற்கு ரூபாய் ஆறு (ரூ.6/-) ஒறுப்புக் கட்டணமாக செலுத்துதல் வேண்டும்.
7. மாறுகை மற்றும் நடத்தைச் சான்றிதழ்களின் மறுபடிவங்கள், ரூ.8/- ஒறுப்புக் கட்டணம் செலுத்திய பின்னர், வழங்கப்பட்ட மூலச்சான்றுகள் திரும்பப் பெற இயலாவண்ணம் இழக்கப்பட்டன என்று தகுதி பெற்ற வருவாய்த் துறை அல்லது அரசு பதிவு பெற்ற காவல்துறை அலுவலரிடமிருந்து பெற்ற சான்றின் அடிப்படையிலேயே வழங்கப்படும்.
8. கல்வியாண்டின் இறுதியில் வெளியேறும் மாணவர்களுக்கு, அவர்களின் விண்ணப்பத்தின் அடிப்படையில், தகுதியிருப்பின், தேவையான வருகைச் சான்றிதழ் வழங்கப்பெறும்.

## பருவக் கட்டணங்கள் செலுத்துதல்

தமிழக அரசு, 2007-2008-ம் கல்வியாண்டு முதல் முதல் பட்டபடிப்பிற்கும், 2010-2011-ம் கல்வியாண்டு முதல் பட்டமேற்படிப்பிற்கும் கல்வி கட்டணங்களை ரத்துச் செய்துள்ளது.

### பிற கட்டணம் செலுத்துவதற்குரிய விதிமுறைகள்:

1. ஒவ்வொரு பருவத்திற்கும் உரிய பிற கட்டணங்களை ஒரே தவணையிலோ, இரு தவணைகளிலோ செலுத்துதல் வேண்டும். முதல் தவணைத்

தொகையினை ஒவ்வொரு பருவத்தின் பத்தாவது வேலை நாளுக்குள்ளும், இரண்டாவது தவணைத் தொகையினை அடுத்துவரும் 15-ஆம் தினத்திற்குள்ளும் செலுத்த வேண்டும்.

2. மாணவர்கள் உதவித்தொகை, கட்டணச் சலுகை முதலியவற்றுக்காகக் காத்திராமல் கட்டணங்களைச் செலுத்துவதற்குரிய கடைசி நாளுக்கு முன்பாகவே பிறகட்டணம், சிறப்புக் கட்டணம், தேர்வுக் கட்டணம் முதலியவற்றைச் செலுத்திவிட வேண்டும்.

## அபராதத்துடன் பிற கட்டணம் செலுத்துதல்:

1. குறிப்பிட்ட தினத்திற்குள் கட்டணம் செலுத்தத் தவறினால், ஒவ்வொரு வேலை நாளுக்கும் ரூபாய் ஒன்று வீதம் ஒறுப்பு விதிக்கப்படும். கல்லூரி தொடங்கி ஒரு மாதத்திற்குள் கட்டணம் செலுத்தப்படவில்லையென்றால், அம்மாணவரின் பெயர் பதிவேட்டிலிருந்து நீக்கப்பெறும். பெயர் நீக்கப்பெற்ற மாணவர் மீண்டும் சேர்க்கப்பட முதல்வருக்குத் துறைத்தலைவரின் பரிந்துரையுடன் விண்ணப்பிக்க வேண்டும். முதல்வர் அனுமதித்தால் கட்டணம் மற்றும் அபராதத் தொகை ஆகியவற்றுடன் மறுசேர்ப்புக் கட்டணம் ரூபாய் ஐந்து செலுத்துதல் வேண்டும். கட்டண ஒப்புதல் சீட்டு பெற்ற பின்னரே வருகை ஏற்றுக்கொள்ளப்படும்.

2. பயிற்சிக் கட்டணம் முழுவதும் உரிய முறையில் குறிப்பிட்ட தினத்திற்குள் செலுத்தப்படவில்லையெனில், அம்மாணவரின் தேர்வு விண்ணப்பம் மேலனுப்பப் பெறாததுடன், அவர் பல்கலைக்கழகத் தேர்வுகள் எழுதவும் அனுமதிக்கப்படமாட்டார்.

**குறிப்பு:** மேலே குறிப்பிட்டுள்ள முதல் தவணைக் கட்டணம் செலுத்தப்பட வேண்டிய காலவரையற்ற ஒரு மாதம் என்பது பருவம் தொடங்கிய நாள் முதல் 30 நாட்கள் எனவும், அடுத்து வரும் தவணை செலுத்த உள்ள காலவரையற்ற ஒரு மாதம் என்பது அட்டவணை மாதத்தினையும் குறிக்கும்.

## கட்டணங்கள் செலுத்தும்போது பின்பற்றவேண்டிய முக்கிய விவரங்கள்

கல்லூரி அலுவலகத்தில் உள்ள இடத்தில் அமைதி காத்து வரிசையில் வந்து மாணவர்கள் கட்டணம் செலுத்த வேண்டும். மாணவர் பெயர், பதிவெண், பயிலும் ஆண்டு, பயிலும் பாடம், பயிற்று மொழி ஆகிய விவரங்களை எழுதிக் கொடுக்க வேண்டும். செலுத்த வேண்டிய தொகையைக் குறிக்க, கொடுக்கும் தொகையை இனவாரியாகக் குறிக்கவும். அலுவலகத்தில் கொடுக்கப்படும் ரசீதை மாணாக்கர்கள் பாதுகாப்பாக வைத்திருக்க அறிவுறுத்தப்படுகிறார்கள். மேலும், ரசீதுகள் பற்றிய விவரங்களைப் பின்வரும் படிவத்தில் குறித்து வைத்துக் கொள்ளவும்.

## கட்டணங்கள் செலுத்தியதின் முக்கிய விவரங்கள்

| பருவ விவரம் | ரசீது எண். | தேதி | தொகை |
|---|---|---|---|
| முதல் பருவம் | | | |
| | | | |
| இரண்டாம் பருவம் | | | |
| | | | |

## தேர்வுக் கட்டணங்கள்

| பாடப்பிரிவுகள் | எழுத்துத் தேர்வு | செய்முறைத் தேர்வு |
|---|---|---|
| இளநிலைப் பாடப்பிரிவு (UG) | **60** | **100** |
| முதநிலைப் பாடப்பிரிவு (PG) | **120** | **3 Hrs – ரூ.200**<br>**6 Hrs – ரூ.250** |
| ஆய்வியல் நிறைஞர் (M.Phil.) | **300** | **-** |

**தேர்வு நிதி கணக்கு எண்:**

**32009878434**
**"Principal / Controller of Examinations**
**L.N. Govt. College Ponneri,"**
**SBI, Ponneri**

# கட்டண விவரங்கள்

| (முதலாமாண்டு மாணவர்களுக்கு மட்டும்) | | பி.ஏ.,/ பி.எஸ்ஸி., ரூபாய் | எம்.ஏ., ரூபாய் | எம்.எஸ்சி., ரூபாய் |
|---|---|---|---|---|
| **1.** | (அ) பயிற்சிக் கட்டணம் பி.ஏ., (ஒரு பருவத்திற்கு) | இல்லை | **200.00** | - |
| | (ஆ) பயிற்சிக் கட்டணம் பி.எஸ்ஸி., | இல்லை | - | - |
| | (இ) கணினி அறிவியல் | இல்லை | - | - |
| | கணிப்பொறி எழுதுபொருள் கட்டணம் | **150.00** | - | - |
| **2.** | நுழைவுக்கட்டணம் | **5.00** | **5.00** | **5.00** |
| **3.** | மருத்துவச் சோதனைக் கட்டணம் | **5.00** | **5.00** | **5.00** |
| **4.** | ஆய்வகக் கட்டணம் (பி.ஏ., மற்றும் பி.காம் தவிர) | **20.00** | - | **30.00** |
| **5.** | சிறப்புக் கட்டணம் (தன் வைப்பு நிதி கணக்கு ஒன்று) | **234.00** | **234.00** | - |
| **6.** | மதிப்பெண் பட்டியல் ஒவ்வொன்றுக்கும் சரிபார்ப்புக் கட்டணம் | **50.00** | | |

| தன் வைப்பு நிதி கணக்கு ஒன்று | | பல்கலைக்கழகத்திற்கு முதலாமாண்டில் மட்டும் செலுத்த வேண்டி கட்டணம் - தன் வைப்பு நிதி கணக்கு இரண்டு | | | |
|---|---|---|---|---|---|
| | ரூ. | | பி.ஏ.,/ பி.எஸ்சி. ரூபாய் | எம்.ஏ., ரூபாய் | எம்.எஸ்சி. ரூபாய் |
| **1.** நூலகம் | **10** | **1.** பல்கலைக்கழக நுழைவுரிமைக் (மெட்ரிகுலேசன்) கட்டணம் | **30** | | **100** |
| **2.** விளையாட்டு | **100** | **2.** பல்கலைக்கழக அறிந்து ஏற்புக் கட்டணம் | **100** | | **20** |
| **3.** ஒன்றியம் | **20** | **3.** பல்கலைக்கழகப் பதிவுக் கட்டணம் | **80** | **100** | **12** |
| **4.** கல்லூரி நாள் | **12** | **4.** பல்கலைக்கழக விளையாட்டுக் கட்டணம் | **60** | **40** | **10** |
| **5.** ஒலி ஒளி | **10** | **5.** பல்கலைக்கழக நூலகக் கட்டணம் | **60** | **40** | **12** |
| **6.** நாட்காட்டி | **12** | **6.** பல்கலைக்கழக மேம்பாட்டுக் கட்டணம் | **30** | **30** | **--** |
| **7.** ஆண்டுமலர் | **15** | **7.** பல்கலைக்கழக கலாச்சாரக் கட்டணம் | **30** | **30** | **15** |
| **8.** கொடி நாள் | **5** | **8.** நாட்டு நலப்பணித்திட்டம் | **10** | **--** | **10** |
| **9.** எழுதுபொருள் | **50** | **9.** தொழிற்சார்ந்த கல்விக் கட்டணம் (தொழிற்சார்ந்த கல்வி பயிலும் மாணவர்க்கு மட்டும்) | **200** | **--** | **150** |
| மொத்தம் | **234** | **10.** செஞ்சிலுவைக் கட்டணம் | **10** | **--** | **30** |

# வருகைப் பதிவு விதிமுறைகள்

1. ஒவ்வொரு பருவமும் குறைந்தது 90 வேலைநாட்களை கொண்டதாகும். ஒரு கல்வியாண்டில் குறைந்தது 180 நாட்கள் கல்லூரியின் வேலை நாட்களாகும்.
2. 90 நாட்களில், 68 (75%) நாட்கள் வகுப்புகளுக்கு வருகை தந்த மாணவர்கள் மட்டுமே, அப்பருவத்தின் இறுதியில் நடைபெறும் தேர்வுகளை எழுத அனுமதிக்கப்படுவார்கள்.
3. 68 நாட்களுக்குக் குறைவாகவும், 60 (65% - 74%) நாட்களுக்கு மேலாகவும் வருகை புரிந்த மாணவர்கள், ரூ.500/- (ஐநூறு மட்டும்) மன்னிப்புக் கட்டணம் (Condonation Fee) செலுத்தி விண்ணப்பித்துக் கொண்டால் தேர்வு எழுத அனுமதி அளிக்கப்படுவார்கள்.
4. 60 நாட்களுக்கு குறைவாகவும் 45 (50% - 64%) நாட்களுக்கு மேலாகவும் வருகை புரிந்த மாணவர்கள் தேர்வு எழுத அனுமதி அளிக்கப்படமாட்டார்கள். அவர்கள் அடுத்த கல்வியாண்டில் தொடர்ந்து இரண்டாவது, மூன்றாவது ஆண்டு பயில அனுமதிக்கப்படுவார்கள். அவர்கள் ரூ.500/- மன்னிப்புக் கட்டணம் செலுத்தி விண்ணப்பித்துக் கொண்டால், அடுத்த ஆண்டு தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்
5. 45 நாட்களுக்கும் குறைவாக (49%) குறைவாக வருகை புரிந்த மாணவர்கள், தொடர்ந்து இரண்டாவது மூன்றாவது பருவம் பயில அனுமதிக்கப்படுவார்கள். இறுதி ஆண்டு முடித்த பின்னர், மீண்டும் அதே பருவ வகுப்பில் சேர்ந்து பயில வேண்டும்.
6. அறிவியல் பயிலும் மாணவர்கள், தங்கள் செய்முறை வகுப்புகளுக்குத் தனியாக 75% வருகை புரிந்திருக்க வேண்டும். குறைவாக வருகைப் பதிவு உள்ளவர்கள், மேற்காணும் முறைகளில் தான் செய்முறைத் தேர்வு எழுத அனுமதிக்கப்படுவார்கள்.
7. பல்கலைக்கழக விதிகளின்படி ஒரு மாணவர் ஒரு பருவத்தில் 50 சதவீதத்திற்கு குறைவான வருகைப்பதிவைப் பெற்றிருந்தால் அவர் தன் படிப்பினை முடித்தபிறகு இழந்த பருவத்திற்கான வருகைப்பதிவினை பெற மீண்டும் கல்லூரியில் சேர்ந்து படிப்பினைத் தொடர வேண்டும்.
8. ஒரு மாணவர் தன் படிப்புக் காலத்தில் இரண்டு பருவங்களில் 50%க்கும் குறைவான வருகைப் பதிவினைப் பெற்றிருந்தால் அவர் தாமாக கல்லூரியை விட்டு விலகியதாக கருதப்படுவார்.

# படிப்பு உதவித் தொகை

கல்லூரிக் கல்வி இயக்குநர் அலுவலகத்திலிருந்து வழங்கப்படும் உதவித் தொகைகள் **(Various Scholarships sanctioned by the Director of Collegiate Education, Chennai – 600 006)**

1. மாநில அரசு உதவித் தொகைகள் - கல்லூரி மாணவர்களுக்கு **(State Collegiate Scholarship)**
2. முதுநிலைப் பட்டப்படிப்பு உதவித் தொகை

**உதவித் தொகை பெறத் தேவையான தகுதிகள்:**

1. கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் பட்டப்படிப்பு பயிலும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த மாணவர்களின் பெற்றோரது ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமலும், அவர் தம் குடும்பத்தில் பட்டதாரி எவரும் இல்லையெனில், அவர்கள் இலவசக் கல்வி உதவித்தொகை பெறத் தகுதி உடையவராவர். குடும்பத்தில் பட்டதாரி இருந்தாலும் அவர்தம் பெற்றோரின் ஆண்டு வருமானம் ரூ.50,000/-க்கு மிகாமல் இருந்தால் அவர்களும் அரசின் கல்வி உதவித்தொகை பெறத் தகுதி உடையவராவர். மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர்மரபின மாணவர்கள், வருமானம் மற்றும் இதர தகுதி என்ற பாகுபாடியின்றி இலவசக் கல்வி உதவித்தொகை பெறலாம். நடப்பாண்டில் நிர்ணயிக்கப்படுகின்ற தொகையிலிருந்து முழு படிப்புக் கட்டணம், முழுத் தேர்வுக் கட்டணம், முழுச் சிறப்புக் கட்டணம் மற்றும் திரும்பக் கொடுக்கப்படாத கட்டணங்களும் ஈடு செய்யப்படுகின்றன.
2. ஆதிதிராவிடர், பழங்குடியினர் மற்றும் மதம் மாறிய கிறித்துவ ஆதிதிராவிடர்களின் பெற்றோரது ஆண்டு வரும் ரூ.1,00,000/-க்கு மிகாமல் இருந்தால் அவர்களும் மேற்கண்டவாறு மத்திய, மாநில கல்வி உதவித்தொகை பெறத் தகுதி உடையவராவர். ரூ.1,00,000/-க்கு மேற்பட்ட வருமானமுள்ள ஆதிதிராவிட, பழங்குடியின மற்றும் மதம் மாறிய ஆதிதிராவிட கிறித்துவ மாணவர்கள் இலவச கல்வித் திட்டத்தின் மூலம் உதவித் தொகை பெறலாம்.
3. புதிதாக உதவித்தொகை பெற விண்ணப்பப்படிவத்தோடு, வட்டாட்சியர் அலுவலங்களில் பெற்ற சாதி, வருமானம், இருப்பிடம், முதல் பட்டதாரி மற்றும் வருகை ஆகிய சான்றிதழ்களை இணைத்து விண்ணப்பிக்க வேண்டும்.
4. உதவித்தொகையைப் புதுப்பிக்கும்போது புதுப்பித்தல் உதவித்தொகை படிவம் மட்டும் சமர்ப்பித்தால் போதுமானதாகும். எந்தவிதமான சான்றிதழ்களையும் இணைக்கத் தேவையில்லை.
5. திருமணமான மாணவிகளுக்கு மகப்பேறு காலத்திற்கான வருகைப் பதிவில் 10% தளர்வு அளிக்கப்படும்.
6. கல்லூரியில் சேர்ந்த ஒரு மாதத்திற்குள் உதவித்தொகை பெறத் தகுதியுடைய மாணவர்கள் அனைவரும் தவறாமல் கட்டாயமாக உதவித்தொகை பெற விண்ணப்பிக்க வேண்டும். கல்வி மற்றும் இதர கட்டணங்களைக் கல்லூரி நிர்வாகம் அரசிடமிருந்து பெற வேண்டியுள்ளதால், மேற்படி மாணவர்கள் அவசியம் உதவித் தொகைக்கு விண்ணப்பிக்க வேண்டும், இல்லையெனில் உதவித்தொகையை இழப்பதுடன், கல்வி மற்றும் இதர கட்டணங்களைச் செலுத்த வேண்டிய சூழ்நிலையும் ஏற்படும்.

7. பூர்த்தி செய்த விண்ணப்பங்களை உரிய சான்றிதழுடன் இணைத்து அவர்தம் பொறுப்பாசிரியரிடம் அளிக்க வேண்டும்.

**மாணவர்கள் கவனத்திற்கு:**

1. உதவித் தொகை பெறும் மாணவர்கள் 75% வருகை நாட்கள் பெற்றிருக்க வேண்டும். இல்லையேல் எந்த உதவித் தொகையும் வழங்கப்படமாட்டாது.
2. உதவித் தொகை அனைத்தும் தேசிய மயமாக்கப்பட்ட வங்கி மூலமே வழங்கப்படும். மாணவர்கள் தேசிய மயமாக்கப்பட்ட வங்கியில், தம் பெயர் கொண்ட சேமிப்புக் கணக்கு ஒன்றைத் அவ்வங்கியில் தொடங்க வேண்டும் என்று அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## வருகைப்பதிவும், விடுப்பும்

1. மாணவர்கள் கல்லூரி முதல்வருக்கு முன்னதாகவே விடுப்பு விண்ணப்பம் அனுப்புதல் வேண்டும். விடுப்பிற்கு விண்ணப்பிக்காமல், கல்லூரிக்கு வராமல் இருக்க அனுமதிக்கப்படமாட்டார்கள். தவிர்க்க முடியாத காரணங்களால் விடுப்பு விண்ணப்பம் அனுப்ப இயலவில்லை என்றால் கல்லூரிக்கு வந்த அன்றே விடுப்பு விண்ணப்பம் தரல் வேண்டும். தக்க காரணங்கள் உள்ள விண்ணப்பங்களுக்கு விடுப்பு வழங்கப்படலாம். ஆனால், நோய் காரணமாக எடுக்கும் விடுப்பு மூன்று நாட்களுக்கு மேற்பட்டால் மருத்துவச் சான்றிதழ் தரல்வேண்டும்.
2. விடுதியில் வசிக்கும் மாணவர்களின் விடுப்பு விண்ணப்பங்கள் விடுதிக் காப்பாளரின் ஒப்பம் பெற்று அனுப்பப்படல் வேண்டும்.
3. விடுப்பிற்கு விண்ணப்பிக்காமல் ஒரு நாளில் எந்த ஒரு மணி நேரம் வகுப்பிற்கு வராதிருந்தாலும், அந்நாள் முழுவதும் வராததாகக் கொள்ளப்படும்.
4. காலை அல்லது மாலை முதல் மணியின்போது பேராசிரியர் வகுப்பினுள் வந்த பின்னர் எந்த ஒரு மாணவரும் நுழையக் கூடாது. இடைப்பட்ட வேளைகளில் வரும் மாணவர்கள் பேராசிரியர் அனுமதிப்பின் வகுப்பினுள் வரலாம். இல்லை எனில் வரவில்லை எனக் கொள்ளப்பட்டு அன்றைய நாள் முழுவதற்குமான வருகைப் பதிவை இழக்க நேரிடும்.
5. பல்கலைக்கழகத் தேர்விற்காக, பல்கலைக்கழகத்தால் கேட்கப்படும் ஆண்டு வருகைப் பதிவுச் சான்றிதழ் கீழ்க்கண்ட நிபந்தனைகள் நிறைவு செய்யப்பட்டிருந்தாலன்றி வழங்கப்படமாட்டாது.
   I. மாணவரின் முன்னேற்றமும், நடத்தையும் கல்லூரி முதல்வருக்கு திருப்திகரமாக இருத்தல் வேண்டும்.
   II. மாணவர்கள் மொத்த நாட்களில் நான்கில் மூன்று பங்கு நாட்கள் வந்திருத்தல் வேண்டும்.
   III. செய்முறைப் பயிற்சி வகுப்புகளில் நான்கில் மூன்று பங்கு வருகைப் பதிவு பெற்றிருத்தல் வேண்டும்.

மாணவர் கூட்டுறவுப் பண்டகச் சாலையில் கிடைக்கும் அச்சடிக்கப்பட்ட விடுப்பு விண்ணப்பப் படிவங்களைத் தான் உபயோகிக்க வேண்டும்.

## உடையும், ஒழுக்கமும்

1. மாணவர்கள் தக்க தூய ஆடை அணிந்து வரவேண்டும்.
2. வகுப்புகளுக்குக் காலதாமதமின்றியும், ஒழுங்காகவும் வருதல் வேண்டும். கல்லூரியுடன் தொடர்புடைய செயல்கள் அனைத்தையும் முறையாகச் செய்தல் வேண்டும்.
3. வகுப்புத் தொடங்குவதற்கு முன், முதல் மணி அடிக்கும் பொழுது மாணவர்கள் அந்தந்த வகுப்பறையில் தத்தம் இருக்கையில் இருத்தல் வேண்டும்.
4. கல்லூரி முதல்வர் அறைக்கு முன்னோ, கல்லூரிக்கு நுழை வாயிலிலோ, வெளியேறும் வழியிலோ, விளையாட்டு மைதானத்திலோ, தோட்டத்திலோ, ஏனைய வழியிலோ மாணவர்கள் கூட்டமாகக் கூடி நிற்றல் கூடாது.
5. பண்பாட்டின் அடையாளமாக, மாணவர்கள் தங்கள் நண்பர்களையும், உடன் பயில்வோர்களையும், கல்லூரியில் பணியாற்றுவோரையும் முதன்முதலாகக் காணும்போது வணக்கம் தெரிவித்தல் வேண்டும்.
6. காலதாமதமாக வரும் மாணவர்கள் பேராசிரியர் அனுமதிக்கும் வரை வெளியிலேயே நிற்க வேண்டும். அனுமதி பெற்று உள்ளே சென்ற பின்னர் அவ்வகுப்பு முடிந்த பிறகு தான் வருகைப் பதிவினை கேட்டுப் பெற வேண்டும்.
7. ஒரு வகுப்பிலிருந்து மற்றொரு வகுப்பிற்குச் செல்லும் பொழுது அமைதியாகவும், ஒழுங்காகவும் அனுமதிக்கப்பட்டுள்ள காலத்திற்குள்ளும் செல்லுதல் வேண்டும்.
8. வகுப்புத் தொடக்கத்திலும், முடிவிலும் பேராசிரியர் வரும் பொழுது மாணவர்கள் அவருக்கு வழிவிட்டு எழுந்து நிற்க வேண்டும்.
9. உணவு இடைவேளையின் பொழுது மாணவர்கள் உணவு அருந்தும் இடத்தில் தான் உணவு உண்ண வேண்டும். வகுப்பினுள்ளோ, வெளியிலோ, வராந்தாவிலோ பிற இடங்களிலோ உணவருந்துதல் கூடாது.
10. கல்லூரி விழாக்களிலோ அல்லது பொது விழாக்களிலோ கலந்து கொள்ளும் பொழுது மாணவர்கள் தாங்களாகவே நன் முறையில் மதிப்புடன் நடந்து அவர்களைச் சார்ந்துள்ள மாணவர் சமுதாயத்தினையும் கல்லூரியின் பெருமையினையும் மதிப்பினையும் நிலைநிறுத்துதல் அவசியம்.
11. எந்த விழாவிலும் அல்லது கூட்டத்திலும் நாட்டுப்பண் இசைக்கும் பொழுது மாணவர் எழுந்து நின்று மரியாதை செலுத்துதல் வேண்டும், கண்ட இடத்தில் துப்புதல், புகை பிடித்தல், குப்பைக் கூளங்களை எறிதல் முதலிய ஊறு விளைவிக்கும் செயல்களைச் செய்தல் கூடாது. குப்பைத் தொட்டியினையும் துப்புவதற்காக உள்ள இடத்தினையும் தான்

எப்பொழுதும் அதற்காக உபயோகிக்க வேண்டும். கல்லூரிக்குள் நாகரிகமற்ற முறையில் கூச்சலிடுதல், ஊதுதல், புகைபிடித்தல் முதலியவை அறவே கூடாது.

12. குறிப்பிடப்படாது நேரங்களில் மாணவர்கள் ஆய்வுக் கூடங்களின் உள்ளே நுழைதல் கூடாது.

13. கல்லூரியின் உடைமைகளை உபயோகிக்கும் பொழுது கவனமாகவும், பொறுப்புடனும் உபயோகிக்க வேண்டும். தவறுதலாகவோ அல்லது வேண்டுமென்றோ கல்லூரி உடைமைகள் சேதப்படுத்தப்படின் ஒழுங்கு நடவடிக்கை எடுக்கப்படுவதுடன் அவற்றின் மதிப்புத் தொகையும் வசூலிக்கப்படும்.

14. மாணவர்கள் தங்களுக்குள்ள எந்த ஒரு குறையினையும் கல்லூரி முதல்வருக்குத் துறைத் தலைவர் வழியாகத் தெரிவிக்கலாம். அவ்வாறு தெரிவிக்கும் பொழுது ஒவ்வொருவரும் தனித்தனியாக எழுத்து மூலம்தான் தெரிவிக்க வேண்டும்.

15. கல்லூரி மரச்சாமான்களை மாணவர்கள் எந்தவித இடமாற்றமும் செய்யக்கூடாது. கல்லூரியின் சொத்துக்களை சேதப்படுத்தினால், தண்டிக்கப்படுவதுடன் அவற்றின் மதிப்புத் தொகை வசூலிக்கப்படும்.

16. தமிழ்நாடு கல்வி விதிகளின்படி, ஒழுங்கற்று நடக்கும் மாணவர்களுக்கு
    a. ஒறுப்புக் கட்டணம் விதிக்க **(To Impose Fine)**
    b. கல்லூரியிலிருந்து தற்காலிகமாக விலக்க **(To Suspend)**
    c. கல்லூரியிலிருந்து வெளியேற்ற **(To expel on disciplinary grounds)** கல்லூரி முதல்வருக்கு முழு அதிகாரம் உண்டு.

17. மாணவர் பகடிவதையில் **(Ragging)** ஈடுபட்டாலோ, அல்லது நேரடியாகவோ, மறைமுகமாகவோ முயற்சிகள் மேற்கொண்டாலோ கல்லூரியிலிருந்து முன்னறிவிப்பின்றி உடனடியாக நீக்கப்படுவர். மேலும், இந்திய குற்றவியல் சட்டத்தின் கீழ் நடவடிக்கையும் எடுக்கப்படும்.

18. தன்னைச் சார்ந்த சக மாணவ மாணவியர், ஆசிரியர், ஆசிரியர் அல்லாத பணியாளர்கள் எவருக்கும் மனம், வாக்கு. காயத்தால் ஊறு விளைவித்தாலும், முயற்சித்தாலும், கல்லூரியிலிருந்து வெளியேற்றப்படுவதோடு தமிழ்நாடு கல்வி விதிகளின்படியும் நடவடிக்கை எடுக்கப்படும்.

19. மாணவர் ஒவ்வொருவரும் கல்லூரியில் வழங்கப்படும் முறையான ஒப்பமிட்ட அடையாள அட்டையை எப்பொழுதும் அணிந்திருத்தல் வேண்டும். கல்லூரிக்கு வரும்பொழுது அடையாள அட்டையைக் கொண்டு வராவிட்டால் கல்லூரிக்குள் அனுமதிக்கப்படமாட்டார்கள்.

20. மாணவர்கள் கல்லூரிக்கு வெளியே பொது இடங்களில் ஒழுங்கீனமாக நடந்து கொண்டாலோ காவல் துறையினரால் இவர்கள் மீது புகார் தெரிவித்தாலோ முன்னறிவிப்பின்றி கல்லூரியிலிருந்து நீக்கப்படுவர்.

# நூலக விதிகள்

1. **பொது:**

அ) பொது நூலகம், கல்லூரியைச் சேர்ந்த நூலகர் மேற்பார்வையில் இருக்கும்.

ஆ) ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் நூலக உறுப்பினர்கள் ஆவார்.

இ) நூலகம் மூன்று பிரிவுகளைக் கொண்டது.

(1) பார்வை நூல்கள்

(2) கடன் பெறும் நூல்கள்

(3) பல்கலைக்கழக நூலக வங்கி

ஈ) ஒவ்வொரு மாணவ உறுப்பினருக்கும் ஒரு நூலக அட்டை தரப்படும். நூலக விதிகளுக்கு உட்பட்டு மாணவர்கள் நூல்களைக் கடனாகப் பெற்றுக் கொள்ளலாம்.

2. **கடன்:**

அ) அட்டையின் பேரில் கடன் பெற்ற நூலுக்கு மாணவ உறுப்பினரே பொறுப்பாவர்.

ஆ) மாணவர்கள் கடன் பெற்ற நூல்களை வேறு யாருக்கும் கடன் தரக் கூடாது.

இ) விண்ணப்பத்தின் பேரில், நூல்கள் மாணவர்களுக்கு அறிவிக்கப்பட்ட நேரத்தில் கடன் தரப்படும்.

ஈ) நூல் / புத்தகம் கடன் பெறும்போது, அவை நல்ல முறையில் கட்டமைப்புடன் திகழ்கின்றனவா எனப் பார்த்துக் கொள்ள வேண்டும். கிழிந்த நிலையில் இருந்தால், நூலகர் கவனத்திற்குகொண்டு செல்ல வேண்டும். கடன் பெற்ற பிறகு நூல்களுக்குச் சேதம் ஏற்பட்டிருந்தால் மாணவர் வேறு நூல் வாங்கித் திரும்ப ஒப்படைக்க வேண்டும்.

உ) நூல்களுக்குள் குறிக்கவோ எழுதவோ கூடாது.

ஊ) தேவையான நூல்களைப் பதிவு செய்து கொள்வதற்காக, மாணவர்களுக்கு ஒரு பதிவேடு இருக்கும். இதில் பதிவு செய்தால் வரிசை முறைப்படி நூல் கடன் தர ஏற்பாடு செய்யப்படும்.

எ) ஒரு நூலை ஒரு முறை கால நீட்டம் செய்து வைத்துக் கொள்ள விரும்பினால், நூலைக் கொடுத்துத்தான் அனுமதி பெற வேண்டும். இரண்டு முறை மட்டுமே கால நீட்டம் செய்து கொள்ளலாம்.

3. **காலம்:**

அ) அலுவல் நாட்களில் நூலகம் முற்பகல் 09.00 மணியிலிருந்து பிற்பகல் 01.00 மணி வரையிலும், சுழற்சி-2ல் பயிலும் மாணவர்களுக்காகச் சிறப்பு ஏற்பாடுகளும் செய்யப்பட்டுள்ளன.

ஆ) எந்த மாணவரும் ஒரு நூலைப் பதினைந்து நாட்களுக்கு மேல் வைத்திருக்கக் கூடாது.

இ) பதினைந்து நாட்களுக்குப் பின் அந்த நூல் மீண்டும் வேண்டுமானால், வேறு யாரும் கேட்காத நிலையில்தான் தரப்படும்.

ஈ) கல்லூரிக்கு வராத காரணத்தால், நூலை உரிய காலத்தில் திரும்பத்தர இயலவில்லை எனக் காரணம் கூறுவது ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

**4. திரும்பக் கோரல்:**

அ) கடன் கொடுத்த ஒரு நூலை எப்போது வேண்டுமானாலும் திருப்புமாறு நூலகர் கோரலாம்.

**5. நூல் தவறிப் போதல்:**

அ) உறுப்பினர்கள் கடன் பெற்ற நூல் தவறிப்போனால், வேறு நூல் புதிதாக வாங்கி ஒப்படைக்க வேண்டும் அல்லது நூல் தொகையுடன் இருமடங்கு சேர்த்து உடனே செலுத்திட வேண்டும்.

ஆ) ஒரு குறிப்பிட்ட நூல் தொகுதியினுள் ஒரு குறிப்பிட்ட நூல் தவறிப்போனால், அத்தொகுதியைச் சேர்ந்த எல்லா நூல்களையும் ஒரு சேர வாங்கித் திரும்பச் செலுத்த வேண்டும்.

**6. ஒறுப்புத் தொகையும், தண்டனையும்:**

அ) ஒரு நூலைத் திரும்ப ஒப்படைக்க வேண்டிய காலத்தில் தராவிட்டால், காலக்கடப்புச் செய்யும் ஒரு புத்தகத்திற்கு ஒவ்வொரு நாளுக்கும் ஒரு ரூபாய் வீதம் ஒறுப்புத் தொகை செலுத்த வேண்டும்.

ஆ) ஒரு மாணவர் நூலகத்தினுள் சரிவர நடந்து கொள்ளவில்லை என்றாலோ, உரிய காலத்தில் நூலைத் திருப்பித் தராது போனாலோ, ஒறுப்புத் தொகையைச் செலுத்தாது போனாலோ, முதல்வர் தம் விருப்பப்படி அம்மாணவரை நூலகப் பயன்பாட்டிலிருந்து விலக்கி வைக்கலாம்.

**7. விடுமுறை நாட்கள்:**

கோடை விடுமுறையின்போது நூல் கடன் தருதல் இல்லை.

**8. அமைதி:**

நூலகத்தினுள் மாணவர்கள் முழு அமைதி காத்தல் வேண்டும். நூலகப் பயன்பாட்டுக்கு ஊறு நேரும்படி நடந்துக்கொள்ளக் கூடாது.

**9. ஆசிரியர்கள்:**

அப்போதைக்குரிய பாடநூல் தவிர வேறு நூல்களை ஆசிரியர்கள் யாரும் ஒரு மாதத்திற்கு மேல் வைத்திருக்கக் கூடாது.

**10. பார்வை நூல்கள்:**

நூலகத்திற்குள் பகல் 12:00 மணியிலிருந்து 01:00 மணிக்குள்ளான காலத்தில், பார்வை நூல்களைப் பயன்படுத்திக் கொள்ளலாம். பட்ட மேற்படிப்பு வகுப்பு பயிலும் மாணவர்கள், தங்கள் துறையைச் சேர்ந்த நூலகங்களைப் பயன்படுத்துமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.

## உடல் நலம் ஆய்தல்

முதலாண்டு பட்ட வகுப்பு மாணவர்களுடைய உடல் நிலை கல்லூரியில் சேர்ந்தவுடன் மருத்துவரால் சோதிக்கப்படும்.

முதலாண்டு பட்ட வகுப்பில் நிறுத்தப்பெற்ற மாணவர்கள் தங்கள் படிப்பை மேற்கொண்டு தொடர்வார்களேயாயின் அடுத்த ஆண்டும் அவர்களது உடல் நிலை மருத்துவரால் சோதிக்கப்படும்.

## ஆய்வுக்கூட நெறிமுறைகள்

சீரான திட்டமிட்ட சோதனைகளின்றி அறிவியல் பாடங்களை கற்பது எளிதல்ல. எனவே, மாணாக்கர் இப்பிரிவில் நல்ல கவனம் செலுத்த வேண்டும். விரிவுரை வகுப்புகளில் கற்பிக்கப்படும் பாடங்களுடன் இணைந்து செயல்முறை வகுப்புகளும் நடத்தப்படும்.

செயல்முறை வகுப்புகளில் தகுந்த, தேவையான பயிற்சியும், தேர்ச்சியும் பெற்றாலே, மாணாக்கருக்குப் பல்கலைக்கழக தேர்வுகளுக்கு அனுமதிக்கப்படுவதற்கான சான்றிதழ் வழங்கப்பெறும்.

ஆய்வுக்கூடக் கருவிகளை மாணாக்கர் கவனத்துடனும் எச்சரிக்கையுடனும் கையாள வேண்டும். கவனக் குறைவினால் கருவிகளுக்கு ஏற்படும் சேதத்திற்காக ஈட்டுத்தொகை அல்லது தண்டத் தொகை அல்லது இரண்டும் மாணவரிடமிருந்து துறைத் தலைவரின் முடிவுக்கேற்ப வசூலிக்கப்படும்.

## மாணாக்கர் கூட்டுறவுச் சங்கம்

உலகநாத நாராயணசாமி அரசினர் கல்லூரி மாணாக்கர் கூட்டுறவுச் சங்கம் (வரையறுக்கப்பட்டது) **15.07.1968**ல் பதிவு பெற்றது. மாணாக்கருக்குத் தேவையான எழுது பொருட்களையும், ஆய்வுக் கூடப் பதிவேடுகளையும் மலிவாக விற்பனை செய்வதே இச்சங்கத்தின் தலையாய நோக்கம். கல்லூரி நேரத்தைத் தவிர பிற குறிப்பிட்ட நேரங்களில் விற்பனை நடைபெறும். இச்சங்கத்தைக் கல்லூரி ஆசிரியரும், பிற ஊழியரும், மாணாக்கர் அனைவரும் சேர்ந்து தேர்ந்தெடுக்கும் இயக்குநர் குழு நிர்வகிக்கிறது.

## உடற்கல்வி

**1.** கல்லூரியில் கீழ்க்காணும் விளையாட்டுகள் விளையாட வசதிகள் உள்ளன.

**1)** **Cricket –** மட்டைப் பந்து

**2)** **Badminton –** இறகு பந்து

**3)** **Chess –** சதுரங்கம்

**4)** **Ball Badminton –** பூப்பந்து

**5)** **Foot Ball –** கால் பந்து

**6)** **Atheletics –** தடகளம்

**7)** **Kabaddi –** கபடி

**8)** **Boxing –** குத்துச் சண்டை

**9)** **Volleyball –** கைப் பந்து

**10)** **Weight lifting –** பளு தூக்குதல்

இவை கல்லூரி நாட்களில் மாலை **4.00** மணி முதல் **6.00** மணி வரை விளையாடலாம். ஒவ்வொரு மாணவரும் இவ்விளையாட்டுகளில் ஒன்று அல்லது மற்றொன்றில் பங்கெடுக்கும்படிக் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

2. முக்கிய விளையாட்டுக்களிலும், ஓட்டப்பந்தங்களிலும் வகுப்பு வாரியாகப் பல்கலைக்கழகத்தால் நடத்தப்படும் கல்லூரிகளுக்கு இடையேயான போட்டிகளிலும் கல்லூரி பங்கேற்கும். விளையாட்டுப் பந்தயங்கள் சுற்றுலா போன்றவை நடத்தி அனைத்துப் பயிற்சிகளிலும் மாணவர்களிடையே திறமையை ஊக்குவிக்க ஏற்பாடுகள் செய்யப்படும்.
3. கல்லூரியின் சார்பாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட விளையாட்டு வீரர்கள் தக்க சீருடையை அணிய வேண்டும்.
4. ஆண்டுதோறும் விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிப் போட்டிகள் நடத்தப்பெற்று, வெற்றி பெறுவோர்க்குக் கல்லூரி ஆண்டு மற்றும் விளையாட்டு விழாவின்போது பரிசுகளும் சான்றிதழ்களும் வழங்கப்படும்.

## உடற்கல்வி விளையாட்டுக் குழு

முதல்வர், உடற்கல்வி இயக்குநர் மற்றும் மாணவ வகுப்பு பிரதிநிதிகளால் தேர்ந்தெடுக்கப்படும் மாணவர்கள் இக்குழுவில் இடம்பெறுவர்.

உடற்கல்விப் பயிற்சி நடவடிக்கைகள், உடற்கல்வி பற்றிய கருத்தரங்குகள் முதலானவற்றுக்கு ஏற்பாடு செய்வதும், விளையாட்டுகள் மற்றும் உடற்பயிற்சிகள் இவற்றை வளர்ப்பதற்குரிய ஆலோசனைகள் மற்றும் திட்டங்கள் வழங்குவதும் இக்குழுவின் பொறுப்பு.

## நாட்டு நலப்பணித்திட்டம்

நம் கல்லூரியில் நாட்டு நலப்பணித்திட்டத்தின் கீழ் மூன்று குழுக்கள் (Units) செயல்படுகின்றன. ஒவ்வொரு குழுவிலும் 100 மாணவர்கள் என்ற முறையில் 300 மாணவர்கள் பணியாற்றுகிறார்கள். மூன்று குழுக்களுள் இரண்டு மாணவர்களுக்கும், ஒன்று மாணவியருக்கும் பிரிக்கப்பட்டுள்ளது. மேலும், ஒவ்வொரு குழுவிற்கும் ஒரு திட்ட அலுவலர் (Programming Officer) பொறுப்பு ஏற்று நடத்துகிறார். இந்தத் திட்டத்தின் கீழ் சேர்ந்துள்ள மாணவர்கள், ஆண்டுக்கு 120 மணிநேரம் என்ற முறையில் இரண்டு ஆண்டுகள் பணியாற்ற வேண்டும். அப்போதுதான் அவர்கள் சான்றிதழ் பெறத் தகுதி உடையவர்களாவர்.

**இத்திட்டத்தின் முக்கியப் பணிகள்:**

1. மருத்துவமனை, இரயில் நிலையம் முதலிய இடங்களில் பணியாற்றுதல்
2. சாலை ஒழுங்கு
3. குடிசைப் பகுதியில் துப்புரவுப் பணி
4. சிறுசேமிப்பு
5. மரம் நடுதல், பராமரித்தல் போன்றவையாகும்.

இதில் இரு குழுக்கள் மாணவர்களுக்கும், ஒரு குழு மாணவிகளுக்கும் பிரிக்கப்பட்டுள்ளது.

## மாணவர் ஆலோசனை, அறிவுரை மன்றம்

மாணவர் ஆலோசனை, அறிவுரை மன்றம் கல்லூரியில் அமையப் பெற்றுள்ளது. இம்மன்றம் தாவர உயிரியல் மற்றும் தாவரத் தொழில்நுட்பவியல் துறைத் தலைவர் பொறுப்பில் இயங்கும். இம்மன்றத்தின் தலையாய பணிகளான:

1. பல்வேறு போட்டித் தேர்வுகள், நுழைவுத் தேர்வுகள் போன்றவைகளுக்குத் தேவையான அறிவுரை, ஆலோசனைகளை மாணவ மாணவியருக்கு வழங்குதல்.
2. மாணவ, மாணவியரின் படிப்பிற்குகந்த உதவி, ஆலோசனை வழங்குதல்.
3. எதிர்கால நலன் மற்றும் வேலைவாய்ப்புகளுக்குத் துணைபுரியும் பல்வேறு செய்தித்தாள் அறிவிப்புகளையும் விளம்பரங்களையும் தெரியப்படுத்துதல்.
4. மாணவ, மாணவியரின் பாடங்களில் பிரச்சினைகளைக் கேட்டறிந்து, அவற்றிற்கு உரிய தீர்வுகளை வழங்குதல்.
5. மாணவ, மாணவியரின் பாடங்களில் தனிப்பட்ட பயிற்சி வழங்குதல்.
6. மாணவ, மாணவியரின் பொது நலனைப் பேணல் மற்றும் பல.

## பொறுப்பாசிரியர் திட்டம்
## (Tutorial System)

1. ஆசிரியர் மாணவர் இடையே நெருங்கிய தொடர்பு மிகுவதற்கு இத்திட்டம் உதவும்.
2. மாணவர்கள் பிற திறன்களை வளர்த்துக் கொள்ளவும், பொது முன்னேற்றம் மற்றும் நன்னடத்தை இவற்றைக் கண்காணிக்கவும் இத்திட்டம் உதவும்.
3. ஒவ்வொரு மாணவரும் ஒரு பொறுப்பாசிரியரிடம் ஒப்படைக்கப்படுவர். கல்வி மற்றும் பிறவற்றிற்காக மாணவர்கள் அவரவர்களின் பொறுப்பாசிரியரை அணுக வேண்டும்.

## பொறுப்பாசிரியரின் பொறுப்புகள்

1. பொறுப்பாசிரியர் தமக்கு ஒப்படைக்கப்பட்ட மாணவர்களை வாரந்தோறும் சந்திப்பார்.
2. மாணவர்களைப் பற்றிய தகவல்களைப் பொறுப்பாசிரியர் அவ்வப்போது பதிவேட்டில் குறித்துக் கொண்டு வருவார்கள். மாணவர்களின் முகவரி மற்றும் முந்தைய, தற்போதைய கல்வி தேர்வு – தொடர்பான செய்திகள், விடுப்பு விபரங்கள் முதலானவை பதிவு செய்யப்பெறும்.
3. மாணவர்களுடைய வருகையின்மை மற்றும் குறைபாடுகள் முதலானவை மாதம் ஒரு முறை பெற்றோர்களுக்குத் தெரியப்படுத்தப்படும்.
4. நூலகப் பயன்பாடுகளுக்குப் பொறுப்பாசிரியர்கள் பெரிதும் உதவுவார்கள்.

## மாணவர் கடமை

1. பொறுப்பாசிரியரை அவ்வப்போது சந்தித்து அவருடைய உதவியை நாட வேண்டும்.
2. பொறுப்பாசிரியர் கையொப்பம் பெற்ற பிறகே விடுப்பு விண்ணப்பங்களை முதல்வருக்குப் பணிந்தனுப்பப்பட வேண்டும்.
3. புகைவண்டி பயணச் சலுகை விண்ணப்பம், கல்விக் கட்டணச் சலுகை விண்ணப்பம் முதலானவை பொறுப்பாசிரியர் பரிந்துரை பெற்ற பிறகே முதல்வருக்குப் பணிந்தனுப்பப்பட வேண்டும்.

4. கூட்டுறவு பண்டகச்சாலையில் கிடைக்கும் அச்சடிக்கப்பட்ட விண்ணப்பங்களை மட்டுமே பயன்படுத்த வேண்டும்.

## பேரவையும் பிற மன்றங்களும்

இக்கல்லூரியில் கீழ்க்கண்ட மன்றங்கள் உள்ளன.

1. கல்லூரிப் பேரவை
2. தமிழ் மன்றம்
3. தெலுங்கு மன்றம்
4. ஆங்கில மன்றம் - **Zeal**
5. வரலாற்று மன்றம்
6. அரசியல் அறிவியல் மன்றம்
7. கணினி மன்றம் - **Swift**
8. கணிதவியல் மன்றம்
9. இயற்பியல் மன்றம்
10. வேதியியல் மன்றம் - **Panning**
11. தாவர உயிரியியல் மற்றும் தாவர உயிரி தொழில் நுட்பவியல் மன்றம்
12. உயிரியல் மன்றம்
13. உடற்கல்வி மன்றம்
14. கவின் கலை மன்றம் - சிறகை விரிப்போம்
15. திட்ட மன்றம்

இம்மன்றங்கள் அந்தந்தத் துறையில் உள்ள மாணவர்களின் அறிவினை மேம்படுத்த உதவியாக அமையும்.

கல்லூரி முதல்வர் எல்லா மன்றங்களின் தலைவராவார். ஒவ்வொரு மன்றத்திற்கும் ஒரு துணைத் தலைவர் உண்டு.

எல்லா மன்றங்களுக்கும் மூன்றாம் ஆண்டு, இரண்டாம் ஆண்டு பட்ட வகுப்பிலிருந்து முறையே செயலர், உதவிச் செயலர் ஒருவரை கல்லூரி முதல்வர் நியமனம் செய்வார்.

## கல்லூரிப் பேரவை

கல்லூரி மாணவர்கள் அனைவரும் கல்லூரிப் பேரவையின் உறுப்பினர்கள் ஆவர். கல்லூரி முதல்வர் இப்பேரவையின் தலைவர். கல்லூரி முதல்வர் பேரவையின் துணைத் தலைவரை நியமனம் செய்வார்.

கல்லூரி ஆசிரியர் ஒருவர் மன்றத்தின் துணைத் தலைவராக முதல்வரால் நியமிக்கப்படுவார். மன்றத்தின் நடவடிக்கைகளை முன்னின்று நடத்த மாணாக்கரிலிருந்து ஒரு செயலரும், இணைச் செயலரும் நியமிக்கப்படுவர்.

கல்லூரி மாணாக்கர் பேரவை நடவடிக்கைகளுக்குச் சொல்லப்பட்ட நடைமுறை நியதிகள் அனைத்தும் மன்றங்களின் நடவடிக்கைகளுக்கும் பொருந்தும், கிளை மன்றங்களுக்கான பொறுப்பாளர்கள் பின்கண்ட முறைப்படி நியமிக்கப்படுவார்கள்.

ஒவ்வொரு வகுப்பிலிருந்தும் (பயிற்றுமொழி பேதமின்றி) ஒரு வகுப்பு பிரதிநிதி தேர்ந்தெடுக்கப்படுவார். மூன்றாமாண்டு பட்ட வகுப்புப் பிரதிநிதி அத்துறை சார்ந்த கிளை மன்றத்தின் செயலராவார். இரண்டாமாண்டு வகுப்புப் பிரதிநிதி இணைச் செயலாளராவார்.

தவிர ஒவ்வொரு வகுப்பும் (பயிற்றுமொழி பேதமின்றி) கவின்கலை மன்றத்திற்கும், திட்டமன்றத்திற்கும், உடற்கல்வி மன்றத்திற்கும், தமிழ்மன்றத்திற்கும், தெலுங்கு மன்றத்திற்கும் (அவ்வகுப்பில் தெலுங்கு பயில்பவர் இருப்பின்) ஒவ்வொரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுப்பார்கள். இப்பிரதிநிதிகள் மன்ற வாரியாக தங்களுக்குள் கூடித் தம்மில் ஒருவரைச் செயலராகவும், மற்றொருவரை இணைச் செயலராகவும் தேர்ந்தெடுப்பர்.

## பெற்றோர் ஆசிரியர் கழகம்

### பதிவு எண்.216/2001

இக்கழகம் தொடங்கிய நோக்கம், கல்லூரியில் ஒழுங்கு நிலைநாட்டவும், பெற்றோர் – ஆசிரியர் இடையே நெருங்கிய உறவு ஏற்படவும், அவர்களிடையே கருத்துப் பரிமாற்றம் இருக்கவும். இக்கழகத்தின் பொறுப்பாளர்கள் கல்லூரி முதல்வரால் நியமனம் செய்யப்படுவர். ஒவ்வொரு ஆண்டும் பெற்றோர், பழைய மாணவர்கள், பயிலும் மாணவர்கள் பங்கேற்றுக் கல்வி மேம்பாட்டிற்கான கருத்துக்களைத் தெரிவிப்பர்.

இக்கழகத்தில் உள்ள உறுப்பினர்கள் எந்த ஒரு பிரச்சனையிலும் கல்லூரி முதல்வர், தலைவர் முடிவிற்குக் கட்டுப்பட்டவர்கள் ஆவர்.

## கல்லூரி ஆட்சி மன்றக்குழு

## (The College Council)

கல்லூரி முதல்வர் மற்றும் அனைத்து துறைத்தலைவர்கள் ஆட்சி மன்றக்குழுவின் உறுப்பினர்கள் ஆவர்.

கல்லூரி ஆட்சி மன்றக்குழுவின் பணி ஆலோசனைகள் வழங்குவது மட்டுமேயாகும். இடவசதி, பாடங்கள், ஒழுங்குமுறை விதிகள் மற்றும் முதல்வரால் பார்வைக்குக் கொண்டு வரப்படுவன முதலியன கல்லூரி ஆட்சி மன்றக்குழுவின் ஆய்வுக்கும், அறிக்கைக்கும் உட்பட்டவை ஆகும்.

## தன்னாட்சி

உலகநாத நாராயணசாமி அரசு கல்லூரிக்கு 2011-2012ஆம் கல்வியாண்டில் தன்னாட்சி நிலை வழங்கப்பட்டது. 2011-2012ஆம் ஆண்டு முதல் அனைத்து இளங்கலை மற்றும் இளம் அறிவியல், முதுகலை மற்றும் முதுநிலை அறிவியல் ஆகியவற்றிற்கு பாடத்திட்டங்கள் மாணவர்களுக்குப் பயன் தரும் வகையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளன. பல்கலைக்கழக மான்யக்குழுவின் விதிமுறைகளின்படி, நிர்வாகக் குழு, நிதிக்குழு, கல்விக்குழு, பாடத்திட்டக் குழு, தேர்வுக் குழு, தரக்கட்டுப்பாட்டுக் குழு ஆகியவை தன்னாட்சி அமைப்பில் இணைந்து புதிய கல்வித்திட்டங்களை உருவாக்கிச் செயல்படுத்தி வருகின்றன.




கல்வி, மருத்துவம், பொறியியல், சட்டம் ஆகிய துறைகளைச் சார்ந்த வல்லுநர்கள் இந்தக் குழுக்களில் உறுப்பினர்களாக இருந்து கல்லூரியின் முன்னேற்றத்திற்குரிய முறையான அறிவுரைகளை வழங்கி வருகிறார்கள்.

## தன்னாட்சி நிலையின் முக்கிய அம்சங்கள்

| SCHEME OF EXAMINATION | INTERNAL | EXTERNAL | TOTAL |
|---|---|---|---|
| **All Theory Courses** | **25%** | **75%** | **100** |
| **All Practical Courses** | **40%** | **60%** | **100** |

| S.No. | Programme | Total Credits |
|---|---|---|
| **1.** | **B.A., / B.Com., / B.C.A., / B.Sc.,** | **140** |
| **2.** | **M.A., / M.Sc.,** | **90** |

## CHOICE BASED CREDIT SYSTEM (for UG & PG Courses)

## தெரிவு முறை மதிப்பீட்டுத் திட்டம்

### (இளங்கலை மற்றும் முதுகலைக் கல்விக்குரியது)

தெரிவு முறை மதிப்பீட்டுத் திட்டம் பின்வரும் பயன்களைக் கொண்டதாகும்.

- ☞ மாணவர்கள் தங்களது தேவைக்கும் விருப்புக்கும் ஏற்ப, தாங்கள் கற்கவிருக்கும் பாடங்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வதற்கு வாய்ப்பளிக்கப்படுகிறது.
- ☞ குறிப்பிட்ட ஒரு பாடத்தில் சேர்ந்து பயிலுவதற்குரிய தகுதியை மாணவர் பெற்றிருந்தால், அவர் அப்பாடத்தை வழங்கும் எந்தத் துறையிலும் சேர்ந்து பயிலுவதற்குரிய வாய்ப்பும் அளிக்கப்படுகிறது.
- ☞ ஒரு பருவத்தில் 30 மதிப்பீடுகளுக்குத் தேவையான பாடங்களை அம்மாணவர் கற்கலாம்.
- ☞ திறமையுள்ள மாணவர்கள் குறிப்பிட்ட கால அளவில் தேவையான மதிப்பீடுகளைப் பெற்ற நிலையில், திறமை குறைந்த, மாணவர்கள் படிப்படியாக, தேவையான மதிப்பீடுகளைப் பெறுவதற்கான வாய்ப்பு அளிக்கப்படுகிறது.
- ☞ மாணவர் பட்டம் பெறுவதற்கு ஒவ்வொரு பாடமுறையிலும், முதன்மைப்பாடங்கள் எனக்குறிப்பிட்ட சில பாடங்களில் கட்டாயமாகத் தேர்ச்சி பெற வேண்டும்.
- ☞ இது தவிர, சில பாடமுறைகள் சார்புப் பாடங்கள் என அழைக்கப்பெறும் இவற்றிலிருந்து மாணவர்கள் சிலவற்றை தெரிவு செய்து கொள்ளலாம்.
- ☞ இவற்றோடு, திறன் சார்ந்து படிப்புகளை இளநிலை வகுப்பில் பயிலுவதால், அம்மாணவர் 8 மதிப்பீடுகளைப் பெறுவார். இந்தத் திறன்சார் படிப்புகளுள் எவற்றைத் தேர்வு செய்துவது என்பதை மாணவரும் அவருக்கு அப்படிப்பினை வழங்குபவரும் முடிவு செய்வர். இதனால் மாணவர் கல்வி கற்றவுடன் வேலைக்குச் செல்லும் வாய்ப்பு உடனே கிடைக்கிறது.
- ☞ தமிழ் ஆங்கிலம் தவிர்த்து மொழிப்பாடங்களை உள்ளடக்கிய முதன்மைப் பாடங்கள் அல்லாத பிற பாடங்களில் 8 மதிப்பீடுகளை மாணவர் பெறுவார். இப்பாடங்களைத் தெரிவு செய்யும் பொறுப்பும் மாணவர் மற்றும் அவருக்குக் கல்வி வழங்கும் ஆசிரியரைச் சாரும்.
- ☞ இம்முறையின் கீழ் பயிலும் மாணவர்கள் தாம் கல்லூரியில் சேர்ந்தவுடன், தாம் எந்தெந்தப் பாடங்களை முதன்மை, திறன்சார், சார்புப் பாடங்களாகத் தெரிவு செய்யப்போகிறார் போன்ற விவரங்களடங்கிய ஒரு பயில் திட்டத்தை அளித்தல் வேண்டும். அக்கல்வி நிறுவனத்தில் வழங்கப்படுகின்ற பாடங்களுக்கேற்ப ஒவ்வொரு பருவமும் தொடங்குவதற்கு முன்பு, தாம் தெரிவு செய்த பாடத்தில் சேர்ந்து படிப்பதற்குரிய விண்ணப்பத்தை அவர் நிறைவு செய்து தருதல் வேண்டும். அந்தந்தப்பாடங்களை வழங்கும் துறையின் தலைவர்களிடம் அம்மாணவர்கள் தாம் பயிலவிருக்கும் பாடத்திற்காக உரிய காலத்திற்குள் பதிவு செய்து கொள்ள வேண்டும்.
- ☞ தெரிவு முறைப் பாடத்தின் கீழ் எந்தெந்தப் பாடங்கள் வழங்கப்படுகின்ற என்ற விவரத்தை மாணவர்கள் அறிந்து கொள்வதற்காக, அவை

பல்கலைக்கழக / கல்வி நிறுவன விளக்க ஏட்டில் தரப்படும். இதிலிருந்து மாணவர்கள் தமக்குரிய பாடங்களைத் தெரிவு செய்து கொள்ளலாம்.

இத்தெரிவு முறைக் கல்வியின் கீழ் மாணவரின் செயல் திறம் பின்வரும் குறியீடுகளாகக் குறிக்கப் பெறும்.

| தரம் | புள்ளிகள் | விவரம் |
|---|---|---|
| **S** | **10** | சிறப்பு |
| **A** | **9** | மிக நன்று |
| **B** | **8** | நன்று |
| **C** | **7** | சராசரிக்கு மேலே |
| **D** | **6** | சராசரி |
| **F** | **4** | நிறைவு |
| **RA** | **0** | தேர்ச்சியில்லை |
| **FA** | **0** | வருகை பதிவு போதாததால் தேர்ச்சி பெறாதவர் |

☞ மாணவர் **3** அல்லது அதற்கு மேல் பெற்றிருந்தால் அவர் தேவைப்படுகின்ற மதிப்பீட்டைப் பெற்று, தேர்ச்சி பெறாதவராகக் கருதப்படுவார். **RA** அல்லது **FA** பெற்றிருந்தால், அவர் தேர்ச்சி பெறாதவராகக் கருதப்படுவார். ஒரு தாளில் தேர்ச்சி பெறாதவராகக் கருதப்படுவார். ஒரு தாளில் தேர்ச்சி பெற்றிருந்தாலும், அதில் மேலும் கூடுதல் மதிப்பீடுகளைப் பெறுவதற்காக மீண்டும் அத்தாளை எழுதவும் மாணவர்களுக்கு வாய்ப்பளிக்கப்படும்.

☞ திட்டமிடப்பட்ட கல்வி முறையில் தேவையான குறைந்த அளவு தகுதியைப் பெற்று கல்வியைத் தொடர்வதற்கு இத்தகுப் பயன்பாடுகளையுடைய தெரிவு முறை மதிப்பீட்டுக் கல்வி துணை செய்யும்.

# INTERNAL ASSESSMENT TESTS SCHEDULE

| S.No. | Assessment Test | Date / Month | Duration | Syllabus |
|---|---|---|---|---|
| **1.** | **Internal Assessment Test – I** | **After completing 30 days from the commencement of the semester** | **2 periods** | **35% in the total syllabus** |
| **2.** | **Internal Assessment Test – II** | **After completing 60 days from the commencement of the semester** | **2 periods** | **70% in the total syllabus** |
| **3.** | **Model Exam** | **After completing 85 days from the commencement of the semester** | **3 hours** | **100% of the syllabus** |

# தரநிர்ணயம் உறுதிப்படுத்தும் அமைப்பு

# Internal Quality Assurance Cell (IQAC)

தரநிர்ணயம் உறுதிப்படுத்தும் அமைப்பு **(IQAC)** இக்கல்லூரியில் இயங்கி வருகின்றது. தற்பொழுது உள்ள கல்வியின் தரத்தை மேலும் உயர்த்திக் கொள்ளவும், நிலைநிறுத்திக் கொள்ளவும் இந்த அமைப்பு செயல்பட்டு வருகிறது. பாடம் சார்ந்த செயல்பாடுகள், மாணவர் நல முயற்சிகள்,

சமுதாயத்தோடு கல்லூரியின் தொடர்புகள், சமுதாயத்தில் கல்லூரியின் பங்கு, மாணவர்களின் பேச்சு, எழுத்து, திறனாய்வு மற்றும் கவிதை வடிக்கும் திறன், பல்கலைக்கழக மற்றும் தேசிய அளவிலான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு கொள்ளுதல் போன்ற கல்லூரியின் செயல்பாடுகளை இக்குழு உறுதி செய்ய முனைப்போடு பணியாற்றுகிறது. கல்வி நிலையங்களில் தரநிர்ணயம் மற்றும் சான்று வழங்கும் தேசியக்குழு பரிந்துரையின்படி இக்குழு செயல்பட்டு வருகின்றது.

## தன்னாட்சி தேர்வு விதிமுறைகள்

சென்னைப் பல்கலைக்கழக விதிமுறைகளின்படியே தேர்வுக் கட்டணம் மற்றும் தேர்வு விதிமுறைகள் பின்பற்றப்படும்.

ஒவ்வொரு பருவத்தின் முடிவிலும், தேர்வு நடத்தப்படும். ஒவ்வொரு பாடத்திலும் தொடர் மதிப்பீட்டில் 25 மதிப்பெண்களும் பருவத் தேர்வில் 75 மதிப்பெண்களும் ஆக 100 மதிப்பெண்கள் வழங்கப்படும்.

தன்னாட்சித் தேர்வில் ஒவ்வொரு பாடத்திலும் 75 மதிப்பெண்களுக்குக் குறைந்தபட்சம் 30 (UG), 38 (PG) மதிப்பெண்கள் பெற வேண்டும். தேர்வில் வெற்றிபெற 100க்கு 40 (UG), 50 (PG) மதிப்பெண்கள் பெற வேண்டும்.

மறுமதிப்பீடு வேண்டும் மாணவர்கள், தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்ட நாளிலிருந்து, ஒரு வாரத்திற்குள் உரிய கட்டணத்தைச் செலுத்தி, விடைத்தாள் நகல் பெற்று துறைத்தலைவர் மூலம் விண்ணப்பிக்கலாம்.

இளங்கலை மற்றும் இளம் அறிவியல் மாணவர்களுக்கு மூன்று வருட படிப்புக்கு பின்பும், முதுகலை மற்றும் முதுநிலை அறிவியல் மாணவர்களுக்கு இரண்டு வருட படிப்புக்கு பின்பும், தேர்வுத் தாள்கள் நிலுவை இருக்குமெனில் தொடர்ந்து வரும் இரு வருடங்களில் அவர்கள் படித்த பாடத்திட்டத்தின்படி தேர்வு எழுத அனுமதிக்கப்படுவர். அதன் பின்பு நடப்பு வருட பாடத்திட்டன்படி தேர்வுகள் எழுத வேண்டும்.

## கல்விக் கொடைக் கட்டளைகள்

**1. திருக்குறள் பயிற்சிப் பேழை:**

இக்கல்லூரியில் சமூகச் சேவைக்குழுவானது 1975ஆம் ஆண்டில் இத்திட்டத்தை ஏற்படுத்தியது. இத்திட்டத்தின் முதல் நோக்கமானது மாணாக்கரிடையே நற்பண்புகள் வளர்த்து திருக்குறள் நூலின் சிறப்புகளை ஊன்றியுணரச் செய்வதாகும். திருக்குறள் நூலைக் கற்பதில் மாணாக்கரிடையே நல்லதொரு போட்டி மனப்பான்மையை ஏற்படுத்தி, போட்டியும் நடத்துகிறது.

கண்ணாடிப் பேழையினுள் ஒவ்வொரு நாளும் திருக்குறளின் ஓர் அதிகாரம் (தமிழ் மற்றும் ஆங்கிலத்தில்) திறந்து வைக்கப்படும். இப்பேழையின் கீழ் இரண்டு அறைகள் கொண்ட பெட்டியுண்டு. இவை இடம், வலம் என பாகுப்படுத்தப்படுகின்றன.

குறிப்பிட்ட அதிகாரத்தைப் படிக்கின்ற மாணாக்கர், அதனில் உள்ள குறட்பாக்களில் தன்னுடைய நன்னடத்தைக்கு மிகுதியாக வழிகாட்டும் குறளின்

சாரத்தையும், அதனை அவர் தேர்ந்தெடுப்பதற்கான காரணத்தையும் ஒரு தாளில் எழுதி, இடது பக்க அறையினுள் இடவேண்டும். இத்தாளில் அவரது பெயரும், வகுப்பும், எண்ணும் குறிக்கப்படவேண்டும்.

தற்கால நடைமுறைக்குப் பொருந்தாது என அந்த மாணவர் கருதும் குறட்பாவையும் தேர்ந்தெடுத்து அவருடைய தெரிவுக்கான காரணத்துடன் வேறொரு தாளில் எழுதி வலது பக்க அறையினுள் இட வேண்டும். இவ்வாறு மாணாக்கர் தெரிவிக்கும் சீர் தூக்கல் **(Comments and Criticism)** அனைத்தும் ஆண்டிறுதியில் தொகுக்கப்பட்டு ஒரு வல்லுநர் குழுவால் பரிசீலிக்கப்படும். வல்லுநர் குழு பரிந்துரைக்கும் முதல் இரண்டு மாணவர்களுக்கு முதலாவது, இரண்டாவது பரிசுகள் கல்லூரி ஆண்டு விழாவின்பொழுது வழங்கப்படும். முதற்பரிசின் மதிப்பு ரூ.**75,** இரண்டாவது பரிசின் மதிப்பு ரூ.**50** இப்பரிசுகளை திரு.கே.இ. அருணாசலம், எம்.ஏ., எம்.காம்., அவர்கள் தன் பெற்றோர்கள் கே. ஏகாம்பர முதலியார், கே. பாப்பாத்தி அம்மாள் ஆகியோர் நினைவாக நிறுவியுள்ளார்.

**2.** திரு. ஏ.ஆர். தாமோதரன், பி.எஸ்ஸி., (ஆனர்சு), எம்.எல்.சி., அவர்கள் தமது தந்தையார் சர். ஆற்காடு இராமசுவாமி முதலியார் அவர்களின் நினைவாகப் பரிசு வழங்குவதற்கு ரூ.**1,500** அறக்கொடை அளித்தார்கள். இத்தொகை வங்கியில் வைப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனின்றும் பெறப்படும் வட்டியிலிருந்து பரிசு வழங்கப்படுகிறது. பல்கலைக்கழ எம்.ஏ., வரலாற்றுத் தேர்வுகளில் உயர்ந்த மதிப்பெண்களைப் பெறும் மாணவருக்கு இப்பரிசு வழங்கப்பெறும்.

**3.** இக்கல்லூரியின் முன்னாள் முதுகலை வேதியியல் விரிவுரையாளர் திருமதி எஸ். லலிதா, எம்.எஸ்சி., அவர்கள் தன்னுடைய கணவர் திரு. என்.எஸ். சாம்பமூர்த்தி அவர்களின் நினைவுப் பரிசு அறக்கொடையாக ரூ.**3,000** (ரூபாய் மூவாயிரம் மட்டும்) அளித்துள்ளார்கள். இத்தொகை வங்கியில் வைப்பு வைக்கப்பட்டுள்ளது. இதனின்று பெறப்படும், வட்டி ஒவ்வொரு ஆண்டும் போட்டி நடத்தித் தமிழில் சிறந்த ஆக்கக் கவிதை ஒன்றிற்கும், தமிழின் சமகாலத் திறனாய்வுக் கட்டுரை ஒன்றிற்கும் பகிர்ந்து அளிக்கப்படும்.

**4.** மாண்புமிகு தமிழக முன்னாள் முதல்வர் டாக்டர் ஜெ. ஜெயலலிதா அவர்களின் பெயரில் முன்னாள் மாண்புமிகு கல்வி அமைச்சர் பேரா. சு. பொன்னுசாமி அவர்கள் அறக் கொடையாக ரூ.**20,000/-** (ரூபாய் இருபதாயிரம் மட்டும்) அளித்துள்ளார்கள்.

# நாட்குறிப்பு: 2018 – 2019

அறிவின்மை இன்மையுள் இன்மை பிறிதின்மை
இன்மையா வையாது உலகு. "புல்லறிவாண்மை – 841"

| தேதி | நாள் | சுழல் | பணி நாள் | சூன் 2018 |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளி | | | |
| 2 | சனி | | | |
| 3 | ஞாயிறு | | | |
| 4 | திங்கள் | | | |
| 5 | செவ்வாய் | | | |
| 6 | புதன் | | | |
| 7 | வியாழன் | | | |
| 8 | வெள்ளி | | | |
| 9 | சனி | | | |
| 10 | ஞாயிறு | | | |
| 11 | திங்கள் | | | |
| 12 | செவ்வாய் | | | |
| 13 | புதன் | | | |
| 14 | வியாழன் | | | |
| 15 | வெள்ளி | | | |
| 16 | சனி | – | – | விடுமுறை |
| 17 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 18 | திங்கள் | I | 1 | முதல் பருவ தொடக்கம் |
| 19 | செவ்வாய் | II | 2 | |
| 20 | புதன் | III | 3 | |
| 21 | வியாழன் | IV | 4 | |
| 22 | வெள்ளி | V | 5 | |
| 23 | சனி | – | – | விடுமுறை |
| 24 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 25 | திங்கள் | VI | 6 | |
| 26 | செவ்வாய் | I | 7 | |
| 27 | புதன் | II | 8 | |
| 28 | வியாழன் | III | 9 | |
| 29 | வெள்ளி | IV | 10 | |
| 30 | சனி | – | – | விடுமுறை |

மாதத்தின் பணி நாட்கள்: 10 மொத்த பணி நாட்கள்: 10

பொருள்நீங்கிப் பொச்சாந்தார் என்பர் அருள்நீங்கி
அல்லவை செய்தொழுகு வார். "அருள் உடைமை – 246"

| தேதி | நாள் | சுழல் | பணி நாள் | ஜூலை 2018 |
|---|---|---|---|---|
| 1 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 2 | திங்கள் | V | 11 | |
| 3 | செவ்வாய் | VI | 12 | |
| 4 | புதன் | I | 13 | |
| 5 | வியாழன் | II | 14 | |
| 6 | வெள்ளி | III | 15 | |
| 7 | சனி | – | – | விடுமுறை |
| 8 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 9 | திங்கள் | IV | 16 | |
| 10 | செவ்வாய் | V | 17 | |
| 11 | புதன் | VI | 18 | |
| 12 | வியாழன் | I | 19 | |
| 13 | வெள்ளி | II | 20 | |
| 14 | சனி | – | – | விடுமுறை |
| 15 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 16 | திங்கள் | III | 21 | |
| 17 | செவ்வாய் | IV | 22 | |
| 18 | புதன் | V | 23 | |
| 19 | வியாழன் | VI | 24 | |
| 20 | வெள்ளி | I | 25 | |
| 21 | சனி | – | – | விடுமுறை |
| 22 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 23 | திங்கள் | II | 26 | |
| 24 | செவ்வாய் | III | 27 | |
| 25 | புதன் | IV | 28 | முதல் அகமதிப்பீடு தேர்வுகள் |
| 26 | வியாழன் | V | 29 | ” |
| 27 | வெள்ளி | VI | 30 | ” |
| 28 | சனி | – | – | விடுமுறை |
| 29 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 30 | திங்கள் | I | 31 | முதல் அகமதிப்பீடு தேர்வுகள் |
| 31 | செவ்வாய் | II | 32 | ” |

மாதத்தின் பணி நாட்கள்: 22 மொத்த பணி நாட்கள: 32

கொடுப்பதூஉந் துய்ப்பதூஉம் இல்லார்க்கு அடுக்கிய
கோடியுண் டாயினும் இல். “நன்றியில் செல்வம் – 1005”

| தேதி | நாள் | சுழல் | பணி நாள் | ஆகஸ்டு 2018 |
|---|---|---|---|---|
| 1 | புதன் | III | 33 | முதல் அகமதிப்பீடு தேர்வுகள் |
| 2 | வியாழன் | IV | 34 | |
| 3 | வெள்ளி | V | 35 | |
| 4 | சனி | – | – | விடுமுறை |
| 5 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 6 | திங்கள் | VI | 36 | |
| 7 | செவ்வாய் | I | 37 | |
| 8 | புதன் | II | 38 | |
| 9 | வியாழன் | III | 39 | |
| 10 | வெள்ளி | IV | 40 | |
| 11 | சனி | – | – | விடுமுறை |
| 12 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 13 | திங்கள் | V | 41 | |
| 14 | செவ்வாய் | VI | 42 | |
| 15 | புதன் | I | 43 | |
| 16 | வியாழன் | II | 44 | |
| 17 | வெள்ளி | III | 45 | |
| 18 | சனி | – | – | விடுமுறை |
| 19 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 20 | திங்கள் | IV | 46 | |
| 21 | செவ்வாய் | V | 47 | |
| 22 | புதன் | – | – | பக்ரீத் - விடுமுறை |
| 23 | வியாழன் | VI | 48 | |
| 24 | வெள்ளி | I | 49 | |
| 25 | சனி | – | – | விடுமுறை |
| 26 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 27 | திங்கள் | II | 50 | |
| 28 | செவ்வாய் | III | 51 | |
| 29 | புதன் | IV | 52 | |
| 30 | வியாழன் | V | 53 | |
| 31 | வெள்ளி | VI | 54 | |

மாதத்தின் பணி நாட்கள்: 22 மொத்த பணி நாட்கள்: 54

எனைப்பகை உற்றாரும் உய்வர் வினைப்பகை
வீயாது பின்சென்று அடும். "தீவினை அச்சம் – 207"

| தேதி | நாள் | சுழல் | பணி நாள் | செப்டம்பர் 2018 |
|---|---|---|---|---|
| 1 | சனி | – | – | விடுமுறை |
| 2 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 3 | திங்கள் | I | 55 | |
| 4 | செவ்வாய் | II | 56 | |
| 5 | புதன் | III | 57 | |
| 6 | வியாழன் | IV | 58 | |
| 7 | வெள்ளி | V | 59 | |
| 8 | சனி | – | – | விடுமுறை |
| 9 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 10 | திங்கள் | VI | 60 | இரண்டாம் அகமதிப்பீடு தேர்வுகள் |
| 11 | செவ்வாய் | I | 61 | ” |
| 12 | புதன் | II | 62 | ” |
| 13 | வியாழன் | – | – | விநாயகர் சதுர்த்தி – விடுமுறை |
| 14 | வெள்ளி | – | – | விடுமுறை |
| 15 | சனி | – | – | விடுமுறை |
| 16 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 17 | திங்கள் | III | 63 | இரண்டாம் அகமதிப்பீடு தேர்வுகள் |
| 18 | செவ்வாய் | IV | 64 | ” |
| 19 | புதன் | V | 65 | |
| 20 | வியாழன் | VI | 66 | |
| 21 | வெள்ளி | – | – | முகரம் – விடுமுறை |
| 22 | சனி | – | – | விடுமுறை |
| 23 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 24 | திங்கள் | I | 67 | |
| 25 | செவ்வாய் | II | 68 | |
| 26 | புதன் | III | 69 | |
| 27 | வியாழன் | IV | 70 | |
| 28 | வெள்ளி | V | 71 | |
| 29 | சனி | – | – | விடுமுறை |
| 30 | ஞாயிறு | – | – | விடுமுறை |

மாதத்தின் பணி நாட்கள்: 17 மொத்த பணி நாட்கள்: 71

இடும்பைக்கு இடும்பை படுப்பர் இடும்பைக்கு
இடும்பை படாஅ தவர். “இடுக்கண் அழியாமை – 623”

| தேதி | நாள் | சுழல் | பணி நாள் | அக்டோபர் 2018 |
|---|---|---|---|---|
| 1 | திங்கள் | VI | 72 | |
| 2 | செவ்வாய் | — | — | காந்தி ஜெயந்தி –விடுமுறை |
| 3 | புதன் | I | 73 | |
| 4 | வியாழன் | II | 74 | |
| 5 | வெள்ளி | III | 75 | |
| 6 | சனி | — | — | விடுமுறை |
| 7 | ஞாயிறு | — | — | விடுமுறை |
| 8 | திங்கள் | IV | 76 | |
| 9 | செவ்வாய் | V | 77 | |
| 10 | புதன் | VI | 78 | |
| 11 | வியாழன் | I | 79 | |
| 12 | வெள்ளி | II | 80 | |
| 13 | சனி | — | — | விடுமுறை |
| 14 | ஞாயிறு | — | — | விடுமுறை |
| 15 | திங்கள் | III | 81 | |
| 16 | செவ்வாய் | IV | 82 | |
| 17 | புதன் | V | 83 | |
| 18 | வியாழன் | — | — | சரஸ்வதி பூஜை - விடுமுறை |
| 19 | வெள்ளி | — | — | ஆயுத பூஜை - விடுமுறை |
| 20 | சனி | — | — | விடுமுறை |
| 21 | ஞாயிறு | — | — | விடுமுறை |
| 22 | திங்கள் | VI | 84 | மாதிரித் தேர்வுகள் |
| 23 | செவ்வாய் | I | 85 | ” |
| 24 | புதன் | II | 86 | ” |
| 25 | வியாழன் | III | 87 | ” |
| 26 | வெள்ளி | IV | 88 | ” |
| 27 | சனி | — | — | விடுமுறை |
| 28 | ஞாயிறு | — | — | விடுமுறை |
| 29 | திங்கள் | V | 89 | மாதிரி தேர்வுகள் |
| 30 | செவ்வாய் | VI | 90 | ” |
| 31 | புதன் | I | 91 | ” |

மாதத்தின் பணி நாட்கள்: 20 மொத்த பணி நாட்கள்: 91

வினைவலியும் தன்வலியும் மாற்றான் வலியும்
துணைவலியும் தூக்கிச் செயல்.          "வலியறிதல் – 471"

| தேதி | நாள் | சுழல் | பணி நாள் | நவம்பர் 2018 |
|---|---|---|---|---|
| 1 | வியாழன் | II | 92 | ” |
| 2 | வெள்ளி | III | 93 | ” |
| 3 | சனி | — | — | **விடுமுறை** |
| 4 | ஞாயிறு | — | — | **விடுமுறை** |
| 5 | திங்கள் | — | — | |
| 6 | செவ்வாய் | — | — | **தீபாவளி – விடுமுறை** |
| 7 | புதன் | — | — | **பருவத் தேர்வுகள் தொடக்கம்** |
| 8 | வியாழன் | — | — | ” |
| 9 | வெள்ளி | — | — | ” |
| 10 | சனி | — | — | ” |
| 11 | ஞாயிறு | — | — | **விடுமுறை** |
| 12 | திங்கள் | — | — | **பருவத் தேர்வுகள் தொடக்கம்** |
| 13 | செவ்வாய் | — | — | ” |
| 14 | புதன் | — | — | ” |
| 15 | வியாழன் | — | — | ” |
| 16 | வெள்ளி | — | — | ” |
| 17 | சனி | — | — | ” |
| 18 | ஞாயிறு | — | — | **விடுமுறை** |
| 19 | திங்கள் | — | — | **பருவத் தேர்வுகள் தொடக்கம்** |
| 20 | செவ்வாய் | — | — | ” |
| 21 | புதன் | — | — | **மிலாடி நபி – விடுமுறை** |
| 22 | வியாழன் | — | — | **பருவத் தேர்வுகள் தொடக்கம்** |
| 23 | வெள்ளி | — | — | ” |
| 24 | சனி | — | — | ” |
| 25 | ஞாயிறு | — | — | **விடுமுறை** |
| 26 | திங்கள் | — | — | **பருவத் தேர்வுகள் தொடக்கம்** |
| 27 | செவ்வாய் | — | — | ” |
| 28 | புதன் | — | — | ” |
| 29 | வியாழன் | — | — | ” |
| 30 | வெள்ளி | — | — | ” |

மாதத்தின் பணி நாட்கள்: 02          மொத்த பணி நாட்கள்: 93

பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று.          "வாய்மை – 297"

| தேதி | நாள் | சுழல் | பணி நாள் | டிசம்பர் 2018 |
|---|---|---|---|---|
| 1 | சனி | – | – | விடுமுறை |
| 2 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 3 | திங்கள் | I | 1 | |
| 4 | செவ்வாய் | II | 2 | |
| 5 | புதன் | III | 3 | |
| 6 | வியாழன் | IV | 4 | |
| 7 | வெள்ளி | V | 5 | |
| 8 | சனி | – | – | விடுமுறை |
| 9 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 10 | திங்கள் | VI | 6 | |
| 11 | செவ்வாய் | I | 7 | |
| 12 | புதன் | II | 8 | |
| 13 | வியாழன் | III | 9 | |
| 14 | வெள்ளி | IV | 10 | |
| 15 | சனி | – | – | விடுமுறை |
| 16 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 17 | திங்கள் | V | 11 | |
| 18 | செவ்வாய் | VI | 12 | |
| 19 | புதன் | I | 13 | |
| 20 | வியாழன் | II | 14 | |
| 21 | வெள்ளி | III | 15 | |
| 22 | சனி | – | – | சென்னைப் பல்கலைக்கழக விடைத்தாள் திருத்தும் பணி |
| 23 | ஞாயிறு | – | – | |
| 24 | திங்கள் | – | – | |
| 25 | செவ்வாய் | – | – | |
| 26 | புதன் | – | – | |
| 27 | வியாழன் | – | – | |
| 28 | வெள்ளி | – | – | |
| 29 | சனி | – | – | |
| 30 | ஞாயிறு | – | – | |
| 31 | திங்கள் | – | – | |

மாதத்தின் பணி நாட்கள்: 15          மொத்த பணி நாட்களா: 15

குணனும் குடிமையும் குற்றமும் குன்றா
இனனும் அறிந்தியாக்க நட்பு. "நட்பராய்தல் – 793"

| **தேதி** | **நாள்** | **சுழல்** | **பணி நாள்** | **சனவரி 2019** |
|---|---|---|---|---|
| 1 | செவ்வாய் | IV | 16 | **ஆங்கில புத்தாண்டு – விடுமுறை** |
| 2 | புதன் | V | 17 | |
| 3 | வியாழன் | VI | 18 | |
| 4 | வெள்ளி | I | 19 | |
| 5 | சனி | — | — | **விடுமுறை** |
| 6 | ஞாயிறு | — | — | **விடுமுறை** |
| 7 | திங்கள் | II | 20 | |
| 8 | செவ்வாய் | III | 21 | |
| 9 | புதன் | IV | 22 | |
| 10 | வியாழன் | V | 23 | |
| 11 | வெள்ளி | VI | 24 | |
| 12 | சனி | — | — | **விடுமுறை** |
| 13 | ஞாயிறு | — | — | **போகி – விடுமுறை** |
| 14 | திங்கள் | — | — | **பொங்கல் - விடுமுறை** |
| 15 | செவ்வாய் | — | — | **திருவள்ளுவர் தினம் - விடுமுறை** |
| 16 | புதன் | — | — | **உழவர் தினம் - விடுமுறை** |
| 17 | வியாழன் | I | 25 | |
| 18 | வெள்ளி | II | 26 | |
| 19 | சனி | — | — | **விடுமுறை** |
| 20 | ஞாயிறு | — | — | **விடுமுறை** |
| 21 | திங்கள் | III | 27 | |
| 22 | செவ்வாய் | IV | 28 | |
| 23 | புதன் | V | 29 | |
| 24 | வியாழன் | VI | 30 | |
| 25 | வெள்ளி | I | 31 | |
| 26 | சனி | — | — | **குடியரசு தினம் - விடுமுறை** |
| 27 | ஞாயிறு | — | — | **விடுமுறை** |
| 28 | திங்கள் | II | 32 | |
| 29 | செவ்வாய் | III | 33 | |
| 30 | புதன் | IV | 34 | |
| 31 | வியாழன் | V | 35 | |

மாதத்தின் பணி நாட்கள்: 20 மொத்த பணி நாட்கள்: 35

உடையார்முன் இல்லார்போல் ஏக்கற்றும் கற்றார்
கடையரே கல்லா தவர். "கல்வி – 395"

| தேதி | நாள் | சுழல் | பணி நாள் | பிப்ரவரி 2019 |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளி | VI | 36 | |
| 2 | சனி | – | – | விடுமுறை |
| 3 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 4 | திங்கள் | I | 37 | |
| 5 | செவ்வாய் | II | 38 | |
| 6 | புதன் | III | 39 | |
| 7 | வியாழன் | IV | 40 | |
| 8 | வெள்ளி | V | 41 | |
| 9 | சனி | VI | 42 | |
| 10 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 11 | திங்கள் | I | 43 | |
| 12 | செவ்வாய் | II | 44 | |
| 13 | புதன் | III | 45 | |
| 14 | வியாழன் | IV | 46 | |
| 15 | வெள்ளி | V | 47 | |
| 16 | சனி | – | – | விடுமுறை |
| 17 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 18 | திங்கள் | VI | 55 | |
| 19 | செவ்வாய் | I | 56 | |
| 20 | புதன் | II | 57 | |
| 21 | வியாழன் | III | 58 | |
| 22 | வெள்ளி | IV | 59 | |
| 23 | சனி | V | 60 | வேலை நாள் |
| 24 | ஞாயிறு | – | – | விடுமுறை |
| 25 | திங்கள் | I | 61 | இரண்டாம் அகமதிப்பீடுத் தேர்வு |
| 26 | செவ்வாய் | II | 62 | ” |
| 27 | புதன் | III | 63 | ” |
| 28 | வியாழன் | IV | 64 | ” |

மாதத்தின் பணி நாட்கள்: 19 மொத்த பணி நாட்கள்: 64

படைகொண்டார் நெஞ்சம்போல் நன்றூக்காது ஒன்றன்
உடல்சுவை உண்டார் மனம்.. "புலால் மறுத்தல் – 253"

| தேதி | நாள் | சுழல் | பணி நாள் | மார்ச் 2019 |
|---|---|---|---|---|
| 1 | வெள்ளி | V | 65 | இரண்டாம் அகமதிப்பீடுத் தேர்வு |
| 2 | சனி | — | — | விடுமுறை |
| 3 | ஞாயிறு | — | — | விடுமுறை |
| 4 | திங்கள் | VI | 66 | |
| 5 | செவ்வாய் | I | 67 | |
| 6 | புதன் | II | 68 | |
| 7 | வியாழன் | III | 69 | |
| 8 | வெள்ளி | IV | 70 | |
| 9 | சனி | — | — | விடுமுறை |
| 10 | ஞாயிறு | — | — | விடுமுறை |
| 11 | திங்கள் | V | 71 | |
| 12 | செவ்வாய் | VI | 72 | |
| 13 | புதன் | I | 73 | |
| 14 | வியாழன் | II | 74 | |
| 15 | வெள்ளி | III | 75 | |
| 16 | சனி | — | — | விடுமுறை |
| 17 | ஞாயிறு | — | — | விடுமுறை |
| 18 | திங்கள் | IV | 76 | |
| 19 | செவ்வாய் | V | 77 | |
| 20 | புதன் | VI | 78 | |
| 21 | வியாழன் | I | 79 | |
| 22 | வெள்ளி | II | 80 | |
| 23 | சனி | — | — | விடுமுறை |
| 24 | ஞாயிறு | — | — | விடுமுறை |
| 25 | திங்கள் | III | 81 | |
| 26 | செவ்வாய் | IV | 82 | |
| 27 | புதன் | V | 83 | |
| 28 | வியாழன் | VI | 84 | |
| 29 | வெள்ளி | — | — | புனித வெள்ளி – விடுமுறை |
| 30 | சனி | — | — | விடுமுறை |
| 31 | ஞாயிறு | — | — | விடுமுறை |

மாதத்தின் பணி நாட்கள்: 20 மொத்த பணி நாட்கள்: 84

அழுக்காறு அவாவெகுளி இன்னாச்சொல் நான்கும்
இழுக்கா இயன்றது அறம்.                "அறன் வலியுறுத்தல் – 35"

| **தேதி** | **நாள்** | **சுழல்** | **பணி நாள்** | **ஏப்ரல் 2019** |
|---|---|---|---|---|
| 1 | திங்கள் | I | 85 | **மாதிரித் தேர்வுகள்** |
| 2 | செவ்வாய் | II | 86 | ” |
| 3 | புதன் | III | 87 | ” |
| 4 | வியாழன் | IV | 88 | ” |
| 5 | வெள்ளி | V | 89 | ” |
| 6 | சனி | – | – | **விடுமுறை** |
| 7 | ஞாயிறு | – | – | **விடுமுறை** |
| 8 | திங்கள் | VI | 90 | **மாதிரித் தேர்வுகள்** |
| 9 | செவ்வாய் | I | 91 | ” |
| 10 | புதன் | II | 92 | **இரட்டைப் பருவ தேர்வுகள் தொடக்கம்** |
| 11 | வியாழன் | | | |
| 12 | வெள்ளி | | | |
| 13 | சனி | – | – | **அம்பேத்கர் பிறந்தநாள் - விடுமுறை** |
| 14 | ஞாயிறு | – | – | **விடுமுறை** |
| 15 | திங்கள் | | | |
| 16 | செவ்வாய் | | | |
| 17 | புதன் | | | |
| 18 | வியாழன் | | | |
| 19 | வெள்ளி | | | |
| 20 | சனி | | | |
| 21 | ஞாயிறு | – | – | **விடுமுறை** |
| 22 | திங்கள் | | | |
| 23 | செவ்வாய் | | | |
| 24 | புதன் | | | |
| 25 | வியாழன் | | | |
| 26 | வெள்ளி | | | |
| 27 | சனி | | | |
| 28 | ஞாயிறு | – | – | **விடுமுறை** |
| 29 | திங்கள் | | | |
| 30 | செவ்வாய் | | | |

மாதத்தின் பணி நாட்கள்: 8                மொத்த பணி நாட்கள்: 92

# வரையறுக்கப்பட்ட விடுப்பு நாட்கள்

## RESTRICTED HOLIDAYS

| | | | |
|---|---|---|---|
| 1 | சித்திரா பௌர்ணமி | 19 | ஓணம் |
| 2 | ஆடிப்பெருக்கு | 20 | மகாவீர் ஜெயந்தி |
| 3 | ரிக் உபகர்மா | 21 | ஹிச்ரா புதுவருடம் |
| 4 | யஜுர் உபகர்மா | 22 | சபி காதர் |
| 5 | காயத்திரி ஜெபம் | 23 | சபி பாரத் |
| 6 | ஸ்ரீஜெயந்தி | 24 | ரம்ஜான் முதல்நாள் |
| 7 | சாமஉபகர்மா | 25 | கிரவீன் முஹைதீன் அப்துல் காதர் |
| 8 | தீபாவளி நோன்பு | 26 | ஷாபே மிராஜ் |
| 9 | வைகுண்ட ஏகாதசி | 27 | ஆர்ஃபா |
| 10 | கார்த்திகை தீபம் | 28 | மொஹரம் |
| 11 | ஆருத்திரா தரிசனம் | 29 | மிலாடி நபி |
| 12 | தைப்பூசம் | 30 | குருநானக் பிறந்தநாள் |
| 13 | போகி | 31 | சாம்பல் புதன் |
| 14 | உழவர் திருநாள் | 32 | பெரிய வியாழன் |
| 15 | வரலட்சுமி விரதம் | 33 | கல்லறை பெருநாள் |
| 16 | மாசி மகம் | 34 | கிறிஸ்துமஸ் முன்தினம் |
| 17 | சிவராத்திரி | 35 | புதுவருட முன்தினம் |
| 18 | தெலுங்கு வருடப்பிறப்பு | | |

**LOGANATHA NARAYANASAMY GOVERNMENT COLLEGE (AUTONOMOUS),**
**PONNERI – 601 204. THIRUVALLUR DISTRICT.**
**PHONE: +91 44 2797 2266**

## DEPARTMENT OF ________________________________

**Date: ___ / ___ / 20 ___**

## BONAFIDE / CONDUCT CERTIFICATE

**This is to certify that Mr./Ms. ________________________________**

**is a bonafide student of this college, studying in**

**____________________________________________________________**

**during ____________________.**

**His / Her Conduct and Character are ____________________.**

**Class In-charge** **Head of the Department**

**LOGANATHA NARAYANASAMY GOVERNMENT COLLEGE (AUTONOMOUS),**
**PONNERI – 601 204. THIRUVALLUR DISTRICT.**
**PHONE: +91 44 2797 2266**

**DEPARTMENT OF ___________________________________**

**Date: ___ / ___ / 20 ___**

## ATTENDANCE CERTIFICATE

**This is to certify that Mr./Ms. __________________________________**

**was a bonafide student of this college, studied**

**_____________________________________________________________**

**during ____________________.**

**He / She secured __________ % of attendance during the academic year**

**___________________________.**

**His / Her Conduct and Character are ____________________.**

**Class In-charge** **Head of the Department**

## ODD SEMESTER

| **சுழற்சி** – I (முற்பகல்) | **09.00–09.55** | **09.55 – 10.50** | **10.50 – 11.45** | **11.45 – 12.40** | **12.40 – 01.35** |
|---|---|---|---|---|---|
| **சுழற்சி** – II (பிற்பகல்) | **01.20 – 02.15** | **02.15 – 03.10** | **03.10 – 04.05** | **04.05 – 05.00** | **05.00 – 05.55** |
| **நாள் முறை** | **1** | **2** | **3** | **4** | **5** |
| முதல் நாள் | | | | | |
| இரண்டாம் நாள் | | | | | |
| மூன்றாம் நாள் | | | | | |
| நான்காம் நாள் | | | | | |
| ஐந்தாம் நாள் | | | | | |
| ஆறாம் நாள் | | | | | |

## EVEN SEMESTER

| **சுழற்சி** – I (முற்பகல்) | **09.00–09.55** | **09.55 – 10.50** | **10.50 – 11.45** | **11.45 – 12.40** | **12.40 – 01.35** |
|---|---|---|---|---|---|
| **சுழற்சி** – II (பிற்பகல்) | **01.20 – 02.15** | **02.15 – 03.10** | **03.10 – 04.05** | **04.05 – 05.00** | **05.00 – 05.55** |
| **நாள் முறை** | **1** | **2** | **3** | **4** | **5** |
| முதல் நாள் | | | | | |
| இரண்டாம் நாள் | | | | | |
| மூன்றாம் நாள் | | | | | |
| நான்காம் நாள் | | | | | |
| ஐந்தாம் நாள் | | | | | |
| ஆறாம் நாள் | | | | | |

**கல்லூரிப் படிப்பில் தேர்ச்சிப் பெற்ற மாணவர்கள் தங்களுடைய மாற்றுச் சான்றிதழ்களைக் கல்லூரி அலுவலகத்திலும், தங்கள் பல்கலைக்கழக மதிப்பெண் பட்டியல்களைத் தங்கள் துறையிலும் பெற்றுச் செல்லுமாறு அறிவுறுத்தப்படுகிறார்கள்.**